இன்றைய வேளாண் செய்திகள்

30.05.2013 A.M

## மேற்கு வங்கத்தில் கரையை கடந்தது காற்றழுத்த தாழ்வு மண்டலம்

கடந்த சில நாள்களுக்கு முன்பு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு வங்கத்தில் புதன்கிழமை (மே 29) இரவு கரையைக் கடந்ததாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வடமேற்கு வங்கக் கடலில் சென்னையில் இருந்து சுமார் 1,000 கி.மீ. தூரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது.

இதனால், தமிழகத்தில் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த காற்றழுத்த தாழ்வு நிலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக புதன்கிழமை காலை வலுப்பெற்று வடக்கு நோக்கி நகர்ந்தது.

இந்த காற்றழுத்த தாழ்வு நிலை புதன்கிழமை இரவு 7 மணியிலிருந்து 8 மணிக்குள் மேற்கு வங்கத்தில் கரையைக் கடந்துள்ளது. கரையைக் கடக்கும்போது காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவே இருந்ததால் மேற்கு வங்கம் மற்றும் அதை ஒட்டியுள்ள சில பகுதிகளில் மழை பெய்தது.

இதனால் தமிழகத்தில் மழை பெய்யவில்லை. ஆனால் வெப்பசலனம் காரணமாக ஒரு சில இடங்களில் மழை பெய்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்னும் 3 அல்லது 4 நாள்களில் கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## உத்தரமேரூரில் இடியுடன் மழை

உத்தரமேரூரில் செவ்வாய்க்கிழமை இரவு மின்னல், இடியுடன் மழை பெய்தது.

கத்திரி வெயிலின் நிறைவு நாளான செவ்வாய்க்கிழமை காலை முதல் மாலை வரை உத்தரமேரூர் பகுதியில் அனல் காற்றுடன் வெயில் வாட்டியது.

இந்நிலையில் இரவு மின்னல், இடியுடன் அரை மணி நேரம் மழை பெய்தது. குளிர்ந்த காற்று வீசியதால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

மின்வெட்டால் அவதி: பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தலுக்காக மின்வாரியம் சார்பில் மாதந்தோறும் குறிப்பிட்ட நாளில் மின்தடை செய்யப்படுவது வழக்கம். இதன்படி உத்தரமேரூரில், செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை மின்நிறுத்தம் ஏற்படும் என்று மின்வாரியம் சார்பில் அறிவிக்கப்பட்டு இருந்தது.

ஆனால் மாலை 5.35 மணிக்கு மின்சாரம் வழங்கப்பட்டு 5 நிமிடத்தில் மீண்டும் மின்விநியோகம் திடீரென நிறுத்தப்பட்டது. இரவு 8 மணி வரை மின்சாரம் விநியோகிக்கப்படாததால் பொதுமக்கள், வியாபாரிகள் அவதியடைந்தனர்.

## குறுவை சாகுபடிக்கு தண்ணீர் கிடைக்குமா? பருவமழையை எதிர்நோக்கி காத்திருக்கும் விவசாயிகள்

பெரியாறு - வைகை அணைகளில் போதிய தண்ணீர் இல்லாததால், மதுரை மாவட்டத்தின் இருபோக சாகுபடி பகுதி பாசனத்துக்குத் தண்ணீர் திறக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் குறுவை சாகுபடியைத் தொடங்க பருவமழையை எதிர்நோக்கி விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

பெரியாறு - வைகை அணைகளின் மொத்த நீர் இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கனஅடிக்கு மேல் இருக்கும்நிலையில், ஜூன் 1 ஆம் தேதி மதுரை மாவட்டத்தின் இருபோக சாகுபடி பகுதிக்கும், இரு அணைகளி்ன் மொத்த நீர் இருப்பு 6 ஆயிரம் மில்லியன் கன அடிக்கு மேல் இருக்கும் நிலையில், அக்டோபர் 15 ஆம் தேதி ஒருபோக சாகுபடி பகுதிக்கும் தண்ணீர் திறந்துவிடுவது வழக்கம்.

கடந்த ஆண்டில் பருவமழை பொய்த்த காரணத்தால், குறுவை சாகுபடிக்கு ஜூன் முதல் தேதி தண்ணீர் திறக்க முடியவில்லை. அதோடு, அக்டோபரில் தான் 4 ஆயிரம் மில்லியன் கன அடியைத் தாண்டியது. இதனால், இருபோக சாகுபடி பகுதிக்கு கடந்த ஆண்டு தண்ணீர் திறந்து விடவில்லை.

குறுவை சாகுபடி பாதிக்குமா?: மதுரை மாவட்டத்தின் வாடிப்பட்டி மற்றும் மதுரை வடக்கு தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளுக்கு (இருபோக பகுதி) குறுவை சாகுபடிக்காக ஜூன் 1 ஆம் தேதி பெரியாறு - வைகை அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்படும். இதில் மேற்குறிப்பிட்ட இரு தாலுகாக்களிலும் 45 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறுகிறது. இதில் 90 சதவீதம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது. 2-லிருந்து 3 சதவீதம் கரும்பு, 6 முதல் 7 சதவீதம் வாழை மற்றும் சிறு தானியங்கள் சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு குறுவை சாகுபடி பாதிக்கப்பட்ட நிலையில், இந்த ஆண்டும் தண்ணீர் திறப்பது தள்ளிப்போகும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

பருவமழை கைகொடுக்குமா?: பெரியாறு - வைகை அணைகளில் புதன்கிழமை (மே 29) நிலவரப்படி 1,797 மில்லியன் கன அடி, நீர் இருப்பு உள்ளது. அணையின் நீர்ப் பிடிப்பு பகுதிகளில் போதிய மழை இல்லாததால், அணைகளுக்கு நீர்வரத்து இல்லாத நிலை தொடருகிறது. ஜூன் முதல் செப்டம்பர் வரை கிடைக்கக் கூடிய தென்மேற்கு பருவமழை கிடைத்தால் மட்டுமே அணையின் நீர்வரத்து அதிகரிக்கக் கூடிய நிலை உள்ளது.

காத்திருக்கும் விவசாயிகள்: கடந்த ஆண்டில்தான் பெரியாறு - வைகை பாசனத் திட்டத்தில் மிகக் குறைந்த நாள்களுக்குத் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதுவும் விவசாயிகளுக்குப் பயன்படாமல் போய்விட்டது என்கிறார் அப்பன்திருப்பதி நீரினைப் பயன்படுத்துவோர் சங்கத் தலைவர் அருள் பிரகாசம்.

பெரியாறு - வைகை அணைகளின் நீர் இருப்பு 4 ஆயிரம் மில்லியன் கன அடியை அக்டோபரில்தான் தொட்டது. இருபோக சாகுபடி பகுதிக்கு தண்ணீர் திறந்துவிடமாறு வலியுறுத்தினோம். ஆனால், அக்டோபர் வந்துவிட்டதால் ஒருபோக சாகுபடி பகுதிக்குத்தான் திறக்க முடியும் எனக் கூறி, திறந்துவிட்டனர். ஆனால், மழை இல்லாத காரணத்தால் 20 நாள்களுக்கு மட்டுமே தண்ணீர் திறக்க முடிந்தது. அதுவும் எந்த விவசாயிக்கும் முழுமையான பயன் கிடைக்காமல் போய்விட்டது.

இந்த ஆண்டும் இப்போது அணையில் போதிய நீர் இருப்பு இல்லாத நிலை இருக்கிறது. இதனால், குறுவை சாகுபடிக்கு தண்ணீர் திறப்பது தள்ளிப்போகும் எனத் தெரிகிறது. இருப்பினும், ஜூன் 3 ஆம் தேதிக்குப் பிறகு, பருவ மழை துவங்கும் என அதிகாரிகள் கூறுகின்றனர். இப்போதைய நிலவரப்படி, மழை பெய்தால் மட்டுமே விவசாயப் பணிகளைத் துவங்கும் நிலை இருக்கிறது என்றார்.

## விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்கல்

விருதுநகர் மாவட்டம் மல்லாங்கிணறு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகை வழங்கும்விழா புதன்கிழமை நடைபெற்றது.

கூட்டுறவு வங்கித் தலைவர் பால்ச்சாமி தலைமை வகித்தார். கல்குறிச்சி கூட்டுறவு வங்கித் தலைவர் முருகன், வங்கிச் செயலர் செல்லகுரு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

காரியாபட்டி ஒன்றிய அதிமுக செயலர் கரியனேந்தல் ராமமூர்த்தி விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத் தொகையை வழங்கி பேசுகையில், மல்லாங்கிணறு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் விவசாயிகளுக்கு 1 கோடியே 53 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

வறட்சி நிவாரணம் குறித்து கிராம நிர்வாக அலுவலர்கள் கணக்கெடுத்த போது சிலரது பெயர்கள் விடுபட்டதால் மீண்டும் கணக்கெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. விடுபட்ட விவசாயிகளுக்கும் வறட்சி நிவாரணத் தொகை விரைவில் வழங்கப்படும் என்றார்.

கிளை செயலர்கள் பாண்டிமுத்து, இராமநாதன், வங்கி நிர்வாகக்குழு உறுப்பினர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## பச்சை சோளத்தட்டு தட்டுப்பாடு

வெள்ளக்கோவிலில் முக்கிய மாட்டுத் தீவனமான பச்சை சோளத்தட்டுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் சிறிய கட்டு ஒன்று ரூ.15-க்கு விற்கப்படுகிறது.

நகர்ப்பகுதியில் பலர் மாடுகளை வளர்த்து பால் விற்பனை செய்து வருகின்றனர்.நாட்டின மாடுகளைக் காட்டிலும் கூடுதல் பால் தரும் சிந்து கலப்பின மாடுகள் அதிக அளவில் உள்ளன. இதுதவிர கன்றுக் குட்டிகளை வளர்த்தும் விற்கப்படுகிறது. நகர்ப்புறத்தில் மாடுகளை வளர்ப்போர் தீவனத்துக்கு வியாபாரிகளையே நம்பியுள்ளனர். விவசாயம் செழித்திருந்த காலத்தில் எளிதாகக் கிடைத்த தீவனத்துக்கு, தற்போது தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

கிடைக்கும் குறைந்தளவு தண்ணீரைப் பயன்படுத்தி பயிரிடப்பட்டுள்ள சோளத்தட்டுகளை வியாபாரிகள் வாங்கி வந்து விற்பனை செய்து வருகின்றனர்.

சோளத்தட்டு சிறிய கட்டு ஒன்று ரூ.15-க்கு விற்கப்படுகிறது. பெரிய மாடுகளுக்கு தினமும் 10 கட்டுகள் வரை தேவைப்படுவதாகவும், மழைக்காக காத்திருப்பதாகவும் மாடு வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே சேமித்து வைக்கப்பட்டிருந்த காய்ந்த சோளத்தட்டுகள் முடிந்துவிட்டதால் பச்சைத் தட்டுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது.

## வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழகத்துக்கு மத்திய அரசால் நியாயம் கிடைக்கும் நிலைமை இல்லை: பொன்.ராதாகிருஷ்ணன்

வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழகத்துக்கு மத்திய அரசால் நியாயம் கிடைக்கும் நிலைமை இல்லை என்று, மாநில பாஜக தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறினார்.

பாஜக நிதியளிப்புக் கூட்டம் திருப்பூரில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் மாநில பாஜக தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் பங்கேற்றார்.

முன்னதாக அவர் செய்தியாளர்களிடம் கூறியது: சத்தீஸ்கர் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியினர் மீது மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதலில் பலர் பலியான சம்பவத்தை தமிழக பாஜக வன்மையாகக் கண்டிக்கிறது. மத்திய, மாநில அரசுகள் இணைந்து மாவோயிஸ்டுகள், நக்சலைட்டுகள், பயங்கரவாத அமைப்புகளை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும். அனைத்து மாநில முதல்வர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். பயங்கரவாத செயல்களுக்கு பல அமைப்புகள் துணையாக உள்ளன. அரசியலிலும் அவர்களது அடையாளம் உள்ளது. பயங்கரவாத செயல்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள் மீது கண்காணிப்பும், கடும் நடவடிக்கையும் எடுக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வுக்கு பாஜக முழு ஆதரவு தெரிவிக்கிறது.

காவிரி நடுவர் மன்றம் தாற்காலிக குழுக்களை அமைத்திருந்தாலும் அவற்றை முறையாக செயல்பாட்டுக்குக் கொண்டு வர மத்திய அரசு தன் நிலையை உறுதிப்படுத்த வேண்டும். கர்நாடக பாஜக அரசு ஒத்துழைப்பின் காரணமாக தான் ஒகேனக்கல் குடிநீர் திட்டம் நிறைவேறியது.

வறட்சி நிலைமை: தமிழகத்தில் நிலவும் வறட்சியால் தென்னை, பனை மரங்கள் அழியும் நிலை ஏற்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் தமிழகம் மோசமான நிலைக்கு தள்ளப்படும். வறட்சி நிலைமையை ஆய்வு செய்ய தமிழகத்துக்கு வந்த மத்தியக் குழு அவசரகதியில் வந்து சென்றது.

கேரளத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு மத்திய அரசால் வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டுள்ளது. அதே சமயம் தமிழகத்துக்கு மத்திய அரசால் நியாயம் கிடைக்கும் நிலைமை இல்லை எனத் தெரிகிறது. தமிழகத்தில் வறட்சி நிலைமை குறித்து மாநில அரசு பூர்ணமாக ஆ

ய்வு செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் சி.பி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிரு ந்தனர்.

### "வேளாண் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெறும்'

தமிழக முதல்வர் எடுத்துவரும் முயற்சியால் வேளாண் உற்பத்தியில் தமிழகம் தன்னிறைவு பெறுவது உறுதி என எம்எல்ஏ சு.ரவி கூறினார்.

அரக்கோணம் வட்டாரத்தில் துவரை உற்பத்தியை அதிகரிக்க வேண்டி ஊக்கத் தொகை வழங்கும் நிகழ்ச்சி அரக்கோணம் தொகுதி எம்எல்ஏ அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

விழாவில் நடவு வயலுக்கு ஊக்கத் தொகையாக ஒரு வயலுக்கு ரூ.7,500 வீதம் நூறு பேருக்கும், துவரை செயல்விளக்க தளை அமைக்க ஒரு வயலுக்கு ரூ.10 ஆயிரம், வரிசை நடவுக்கு ரூ.5 ஆயிரம் என 30 பேருக்கு வழங்கப்பட்டது.

விழாவுக்கு வேளாண் உதவி இயக்குநர் எம்.வி.கிருஷ்ணாரெட்டி தலைமை தாங்கினார். இதில் விவசாயிகளுக்கு காசோ

லைகளை வழங்கி எம்எல்ஏ சு.ரவி பேசும்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

விழாவில் ஆத்மா திட்டத் தலைவர் நாகபூஷணம் உள்ளிட்ட அதிமுக பிரமுகர்கள் பலர் பங்கேற்றனர்.

### குடியாத்தத்தில் மழை: மக்கள் மகிழ்ச்சி

குடியாத்தம் மற்றும் அதன் சுற்றுப் பகுதியில் புதன்கிழமை மாலை பலத்த மழை பெய்தது. இதனால் மக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மாலை 5.30 மணிக்கு தொடங்கி 1 மணி நேரம் மழை பெய்தது. தொடர்ந்து இரவு வரை விட்டுவிட்டு மழை பெய்தது.

புதன்கிழமை காலையிலிருந்து வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. இதனால் பாதிக்கப்பட்டிருந்த மக்கள் மழை பெய்ததும் மகிழ்ச்சி அடைந்தனர்.

பாக்கம் துணை மின் நிலையத்தில் இருந்து நகருக்கு வரும் மின்சார லைனில் பழுது ஏற்பட்டதால் மின்விநியோகம் தடைபட்டது. இதனால் நகரம் முழுவதும் இருளில் மூழ்கியது.

ஆர்.எஸ். சாலையில் செதுக்கரை அருகே சாலையோர புங்க மரம் வேரோடு சாய்ந்ததில் அச்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

## மேற்கு வங்கத்தில் கரையை கடந்தது காற்றழுத்த தாழ்வு மண்டலம்

கடந்த சில நாள்களுக்கு முன்பு வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம் மேற்கு வங்கத்தில் புதன்கிழமை (மே 29) இரவு கரையைக் கடந்ததாக வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் கூறியது: வடமேற்கு வங்கக் கடலில் சென்னையில் இருந்து சுமார் 1,000 கி.மீ. தூரத்தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவானது.

இதனால், தமிழகத்தில் மழை பெய்யும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்த காற்றழுத்த தாழ்வு நிலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக புதன்கிழமை காலை வலுப்பெற்று வடக்கு நோக்கி நகர்ந்தது.

இந்த காற்றழுத்த தாழ்வு நிலை புதன்கிழமை இரவு 7 மணியிலிருந்து 8 மணிக்குள் மேற்கு வங்கத்தில் கரையைக் கடந்துள்ளது. கரையைக் கடக்கும்போது காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவே இருந்ததால் மேற்கு வங்கம் மற்றும் அதை ஒட்டியுள்ள சில பகுதிகளில் மழை பெய்தது.

இதனால் தமிழகத்தில் மழை பெய்யவில்லை. ஆனால் வெப்பசலனம் காரணமாக ஒரு சில இடங்களில் மழை பெய்தது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இன்னும் 3 அல்லது 4 நாள்களில் கேரள மாநிலத்தில் தென்மேற்கு பருவமழை தொடங்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழகத்துக்கு மத்திய அரசால் நியாயம் கிடைக்கும் நிலைமை இல்லை: பொன்.ராதாகிருஷ்ணன்

வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் தமிழகத்துக்கு மத்திய அரசால் நியாயம் கிடைக்கும் நிலைமை இல்லை என்று, மாநில பாஜக தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் கூறினார்.

பாஜக நிதியளிப்புக் கூட்டம் திருப்பூரில் புதன்கிழமை நடைபெற்றது. இதில் மாநில பாஜக தலைவர் பொன்.ராதாகிருஷ்ணன் பங்கேற்றார்.

முன்னதாக அவர் செய்தியாளர்களிடம் கூறியது: சத்தீஸ்கர் மாநிலத்தில் காங்கிரஸ் கட்சியினர் மீது மாவோயிஸ்டுகள் நடத்திய தாக்குதலில் பலர் பலியான சம்பவத்தை தமிழக பாஜக வன்

மையாகக் கண்டிக்கிறது. மத்திய, மாநில அரசுகள் இணைந்து மாவோயிஸ்டுகள், நக்சலைட்டுகள், பயங்கரவாத அமைப்புகளை இரும்புக் கரம் கொண்டு அடக்க வேண்டும். அனைத்து மாநில முத ல்வர்களுக்கும் முழுமையான பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். பயங்கரவாத செயல்களுக்கு பல அமைப்புகள் துணையாக உள்ளன. அரசியலிலும் அவர்களது அடையாளம் உள்ளது. பய ங்கரவாத செயல்களுக்கு உறுதுணையாக இருப்பவர்கள் மீது கண்காணிப்பும், கடும் நடவடிக் கையும் எடுக்கப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வுக்கு பாஜக முழு ஆதரவு தெரிவிக்கிறது.

காவிரி நடுவர் மன்றம் தாற்காலிக குழுக்களை அமைத்திருந்தாலும் அவற்றை முறையாக செய ல்பாட்டுக்குக் கொண்டு வர மத்திய அரசு தன் நிலையை உறுதிப்படுத்த வேண்டும். கர்நாடக பாஜக அரசு ஒத்துழைப்பின் காரணமாக தான் ஒகேனக்கல் குடிநீர் திட்டம் நிறைவேறியது.

வறட்சி நிலைமை: தமிழகத்தில் நிலவும் வறட்சியால் தென்னை, பனை மரங்கள் அழியும் நிலை ஏ ற்பட்டுள்ளது. இதே நிலை நீடித்தால் தமிழகம் மோசமான நிலைக்கு தள்ளப்படும். வறட்சி நிலை மையை ஆய்வு செய்ய தமிழகத்துக்கு வந்த மத்தியக் குழு அவசரகதியில் வந்து சென்றது.

கேரளத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை மரங்களுக்கு மத்திய அரசால் வறட்சி நிவாரண ம் வழங்கப்பட்டுள்ளது. அதே சமயம் தமிழகத்துக்கு மத்திய அரசால் நியாயம் கிடைக்கும் நிலை மை இல்லை எனத் தெரிகிறது. தமிழகத்தில் வறட்சி நிலைமை குறித்து மாநில அரசு பூர்ணமாக ஆ ய்வு செய்ய வேண்டும். பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடுகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

பாஜக தேசிய செயற்குழு உறுப்பினர் சி.பி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிரு ந்தனர்.

## நிழல்தேடும் மனிதர்கள்

கோடைக் காலத்திலேயே முக்கியமான கட்டமான "அக்கினி நட்சத்திரம்' முடிவுக்கு வந்துவிட்டது. இன்னமும் பல ஊர்களில் வெப்பம் குறையவில்லை. கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு வெப்பம் அதிகம் என்ற பேச்சுகளும், போகப்போக தண்ணீருக்குப் பற்றாக்குறை வரும்போல இருக்கிறதே என்ற அங்கலாய்ப்புகளும் அதிகரித்துக்கொண்டே வருகின்றன.

புவி வெப்பமடையவும், பருவமழை குறையவும், காலம்தவறிப் பெய்யவும் யார் காரணம், மனிதர்களாகிய நாம்தான். விளைநிலங்களுக்காகக் காடுகளை அழித்தோம். வீடு கட்டுவதற்காக

விளைநிலங்களை அழித்துவருகிறோம். நீர் நிலைகளையும் அலையாத்திக் காடுகளையும் அற்ப காசுக்காக காணாமல் போக்கினோம். தண்ணீர்ப் பற்றாக்குறை முதல் சுனாமி தாக்குதல் வரையிலான இயற்கைச் சீற்றங்களை நேரிலேயே அனுபவித்துவருகிறோம்.

மண்ணுக்கடியிலிருந்து கனிமவளத்தைப் பெறுவதற்காக ராட்சத மண் அள்ளும் இயந்திரங்களை இடைவிடாமல் பயன்படுத்துகிறோம். ஆற்று மணலை ஒட்ட எடுத்து கட்டடப் பணிகளுக்காகப் பயன்படுத்துகிறோம். இப்படி எல்லாவிதங்களிலும் இயற்கையைச் சீண்டுகிறோம்.

இன்னும் சில ஆண்டுகளில், மனிதர்கள் வசிப்பதற்கு தகுதியற்ற இடமாக இந்த பூமி மாறிவிடும் என்று சுற்றுச் சூழல் ஆர்வலர்களும் ஆராய்ச்சியாளர்களும் கவலை கொள்கின்றனர். ஆனால் நாம் இதைப் பற்றிய எந்தக் கவலையும், விழிப்புணர்வும் இல்லாமல் சொந்த வீடான பூமியின் சூட்டை தாங்கிக்கொள்ள முடியாமல், நான்கு சுவர்களால் அடைக்கப்பட்ட வீட்டுக்கு குளிர்சாதனப் பெட்டி மூலம் குளிர்ச்சியை ஏற்படுத்த முயல்கிறோம். குளிர்சாதனப் பெட்டியில் இருந்து வெளியேறும் வெப்ப - நச்சு வாயுக்கள் பூமியை மேலும் வெப்பமயமாக்குகிறது என்று தெரிந்தும் கூடுதலாகத் தவறு செய்கிறோம்.

தொழில்புரட்சியால் ஏற்பட்ட ஆலைவாய் விஷப் புகைகளுடன் 2 சக்கர, 4 சக்கர மோட்டார் வாகனங்கள் வெளியிடும் கந்தகம் கலந்த கரியமிலவாயுவும் சேர்ந்து காற்று மண்டலத்தை விஷக்காற்று மண்டலமாக மாற்றி வருகின்றன.

இப்படி இயற்கையை நாசம் செய்யும் நமக்கெல்லாம் நல்வாழ்வு அமைய வேண்டும் என்றால் மரம் வளர்ப்புதான் ஒரே தீர்வு. மரங்களால் மட்டும்தான் கரியமிலவாயு மற்றும் இதர நச்சுக் காற்றை உள்வாங்கிக்கொண்டு, மனிதனுக்குத் தேவையான குளிர்ச்சியையும் நல்ல சுவாசக் காற்றையும் தர இயலும். நாமோ சாலை விரிவாக்கம், தொழிற்சாலைகள் கட்டுமானம், அடுக்குமாடி குடியிருப்புகள், மேம்பாலங்கள் ஆகியவற்றுக்காகத் தொடர்ந்து மரங்களை வெட்டிவருகிறோம்.

ஒரு மரத்தை வெட்டினால், அதற்குப் பதிலாக ஐந்து மரங்களையாவது நட வேண்டும். ஒரு சின்ன இலை வளர அந்த மரம் எடுக்கும் முயற்சி மிக அசாதாரணமானது.

நம்முடைய வீட்டைச் சுற்றி மரங்கள் இருந்தால், நிச்சயம் அந்த வீட்டில் மின்விசிறிகள், குளிர்சாதனப் பயன்பாடு மிகவும் குறையும், மின்கட்டணமும் குறையும். அதிகப்படியான வெப்பம் விவசாயத்துக்கும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்த பூமியின் மேற்பரப்பு எங்கும் ஏற்படும் வெப்ப உயர்வால் நீண்ட வறட்சியும், தண்ணீர்ப் பற்றாக்குறையும் அடிக்கடி ஏற்படுகிறது. பாலங்கள், சாலைகள் போன்ற கட்டுமானங்கள் வெப்பத் தாக்குதல்களால் வலுவிழந்து அவற்றின் பராமரிப்புச் செலவு அதிகமாகிறது.

உணவுக்கு நம் எதிர்காலச் சந்ததியினர் வீடுகளின் மொட்டைமாடிகளில் காய்கறிச் செடிகள், தானியங்களைப் பயிரிட வேண்டிய நிலை ஏற்படும்.

ஆம், நாம் மாற வேண்டும்; உடனடியாக, போர்க்கால நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். வீட்டிலும் வீட்டைச் சுற்றிலும் மரங்கள், செடிகொடிகளை வளர்க்க வேண்டும். மரங்கள் இளைப்பாற நிழல் தருகின்றன. நகர்ப்புறங்களிலும், வசிப்பிடங்களிலும் வெப்பத்தைக் கட்டுப்படுத்தி இயற்கையான குளிர்சாதன வசதியைத் தருகின்றன.

பெருநகரங்களில் சாலையில் "சிக்னலில்' காத்திருக்கும் இரு சக்கர வாகன ஓட்டிகள், வெயிலை எதிர்கொள்ள முடியாமல் சாலையோர மரங்களின் கீழ் நிற்க, மரங்களைத் தேடிக்கொண்டிருக்கின்றனர். அப்படித் தேட வேண்டிய அவசியம் இல்லாமல் எல்லா சாலைகளிலும் இருபுறங்களிலும் பயனுள்ள மரங்களை நடுவோம்.

## சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க பரப்பு வரம்பு நீக்கம்: சிறு, குறு விவசாயிகளுக்கு 100% மானியம்



சிறு, குறு விவசாயிகள் 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைப்பதற்கு இதுவரை இருந்த பரப்பு வரம்பு நீக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விவசாயிகள் தாங்கள் விரும்பும் பரப்பு முழுமைக்கும் 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்து பயன் பெறலாம்.

இது தொடர்பாக சேரன்மகாதேவி தோட்டக்கலை உதவி இயக்குநர் தி.சு. பாலசுப்பிரமணியன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நாளுக்கு நாள் நீர்த்தேவை அதிகரித்து வரும் நிலையில், சிக்கனமாக நீரைப் பயன்படுத்தி, வருங்காலத் தலைமுறைக்கு வளமான நீர்வளத்தை விட்டுச் செல்ல வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். மேலும், அபரிமிதமாக நீரைப் பயன்படுத்துவதைவிட அளவாக பயன்படுத்தும்

போதுதான் நிறைவான மகசூல் பெற முடிகிறது என்பது அறிவியல் பூர்வமாகவும், அனுபவப் பூர்வமாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவேதான் நீர்ச் சிக்கனத்துக்கும், நிறை மகசூலுக்கும் ஒருசேர வழிவகுக்கும் சொட்டு நீர்ப்பாசன முறையை ஊக்குவிக்கும் வகையில் தமிழக அரசு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் வழங்கி உதவுகிறது.

ஒரு பயனாளிக்கு இதுவரை அதிகபட்ச 100 சதவீத மானியம் ரூ. 43,816ஆக இருந்தது. எனவே, 1.2 மீட்டருக்கு 0.6 மீட்டர் எனக் குறுகிய இடைவெளியில் சாகுபடி செய்யும் காய்கறி போன்ற பயிர்களுக்கு ஒரு ஏக்கர் பரப்பிற்கு மட்டுமே 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க முடியும்.

10 மீட்டருக்கு 10 மீட்டர் இடைவெளியில் நடப்படும் மா போன்ற பயிர்களுக்கு சிறு விவசாயிகளுக்கு 5 ஏக்கரும், குறு விவசாயிகளுக்கு இரண்டரை ஏக்கரும் 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கலாம்.

பயிரிடும் பயிரின் இடைவெளிக்கேற்ப 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைக்கும் பரப்பு மாறுபடும். எஞ்சிய பரப்பிற்கு 75 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்துக் கொள்ளலாம் என்று இருந்தது.

ஆனால், தற்போது ஒரு ஏக்கருக்கு ரூ. 43,816-க்கு மிகாமல் சிறு விவசாயி நன்செய் நிலமாயிருந்தால் இரண்டரை ஏக்கர் வரைக்கும், புன்செய் நிலமாக இருந்தால் 5 ஏக்கர் வரைக்கும் எந்த பயிராக இருந்தாலும், என்ன இடைவெளியாய் இருந்தாலும் விருப்பம் இருப்பின் அவருக்குச் சொந்தமாக இருக்கும் பரப்பு முழுமைக்கும் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்துக் கொள்ளலாம்.

அதேபோல குறு விவசாயி நன்செய் நிலமாக இருந்தால் ஒன்றேகால் ஏக்கர் வரைக்கும், புன்செய் நிலமாக இருந்தால் இரண்டரை ஏக்கர் வரைக்கும் எந்த பயிராக இருந்தாலும், என்ன இடைவெளியாய் இருந்தாலும் விரும்பினால் இருக்கும் பரப்பு முழுமைக்கும் சொட்டு நீர்ப்பாசனம் அமைத்துக் கொள்ளலாம்.

சிறு, குறு விவசாயிகள் தங்களிடம் உள்ள நிலம் முழுமைக்கும் 100 சதவீத மானியத்தில் சொட்டு நீர்ப் பாசனம் அமைக்க தற்போது வழிவகை செய்யப்பட்டுள்ளது.

யார், யார் மானியம் பெறலாம்? வருவாய்த் துறை நில வகைப் பாட்டின்படி நன்செய் நிலமென்றால் இரண்டரை ஏக்கருக்குள்ளும், புன்செய் நிலமென்றால் 5 ஏக்கருக்குள்ளும் சொந்த நிலமுள்ளவர்கள் இம்மானிய உதவி பெறத் தகுதியானவர்கள்.


சொட்டு நீர்ப்பாசனம் அமைக்க விரும்பும் விவசாயிகளுக்கு நீர் இறைக்கும் மோட்டாருடன் கூடிய கிணறோ, ஆழ்துளைக் கிணறோ போதிய நீராதாரத்துடன் இருக்க வேண்டும். பொதுவான நீராதாரம் கொண்ட சின்னஞ்சிறு விவசாயிகள் இரண்டு மூன்று பேர் சேர்ந்தும் இத்திட்டத்தின் கீழ் பயன் பெறலாம்.

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்: பயனாளி விவசாயிகள் சிறு, குறு விவசாயிகளுக்குரிய சான்றிதழை வருவாய் வட்டாட்சியரிடம் பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.

நிலத்தின் கணினி பட்டா, சாகுபடி செய்துள்ள அல்லது செய்யவுள்ள பயிர் பரப்பை சர்வே எண்கள் வாரியாகக் குறிப்பிட்டு கிராம நிர்வாக அலுவலர் வழங்கிய அடங்கல், வயல் வரைபட நகல், இருப்பிட முகவரியைத் தெளிவாகக் குறிப்பிடும் குடும்ப அட்டை நகல் அல்லது வாக்காளர் அடையாள அட்டை நகல், பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள் இரண்டு ஆகியவற்றையும் சமர்ப்பிக்க வேண்டும்.

வாழை, காய்கறிகள், மிளகாய், மலர் பயிர்கள், பழமரப் பயிர்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்களைச் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகள் வட்டார தோட்டக்கலைத் துறை அலுவலர்களைப் பயன்படுத்தி இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி பலன் பெறலாம் என்றார் அவர்.

## அறுவடைக்குப் பிந்தைய செய்நேர்த்தி தொழில்நுட்பங்கள்!



அறுவடை வரையில் மட்டுமல்லாது, அறுவடைக்குப் பின்னரும் தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் உற்பத்தியைப் பாதுகாத்து, நல்ல விலைக்கு விற்பனை செய்யலாம் என வேளாண்மைத் துறை அறிவித்துள்ளது.

நெல்: நெல்லுக்கு கூடுதல் விலை கிடைப்பது அதில் உள்ள முழு அரிசியின் அடிப்படையில்தான் உள்ளது. நெல் மணிகள் அளவையில் 62 சதவீதம் முழு அரிசி கிடைத்திட, அறுவடைக்குப் பின்னர் செய் நேர்த்தி தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டியது அவசியமானது.

நெல் ரகங்களுக்கு ஏற்ற வகையில் பயிரின் அறுவடையை உரிய காலத்தில் மேற்கொள்ள வேண்டும். நெல் கதிரின் மணிகள் 80 சதவீதம் மஞ்சள் நிறமாக மாறி இருந்தால் அறுவடையை மேற்கொள்ளலாம். இதன் மூலம் மணிகள் உதிர்வதைத் தவிர்க்கலாம்.

அறுவடையின்போது 19 முதல் 23 சதவீதம் ஈரப்பதம் இருக்க வேண்டும். முதிர்ந்த நெல் மணிகளின் அரிசி கடுமையானதாகவும், உறுதியாகவும் இருக்கும். அறுவடை செய்த நெல்லை நன்றாகச் சுத்தம் செய்ய வேண்டும். அதிக சூரிய வெப்பத்தில் நெல்லை காய வைக்கக் கூடாது. காயவைத்த நெல்லின் ஈரப்பதம் 12 சதவீதத்துக்குள் இருக்க வேண்டும்.

அதிக ஈரப்பதமுள்ள நெல் மணிகளைச் சேமித்து வைத்தால் பூஞ்சாண வித்துகள் பரவி நெல்லின் தரம் பாதிக்கப்படும்.

நல்லை சுத்தமான கோணிப்பைகளில் நிரப்பி, தரையின் மீது மரச்சட்டங்கள் அல்லது காய்ந்த வைக்கோல் பரப்பி அதன் மேல் மூட்டைகளை அடுக்கி வைக்க வேண்டும். மூட்டைகளை சுவரிலிருந்து ஓர் அடி இடைவெளி விட்டு அடுக்கி வைத்தால் ஈரப்பதம் வராது. சேமித்து வைத்துள்ள நெல்லில் அத்துப்பூச்சி தாக்காமலிருக்க மாலத்தியான் மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 10 மில்லி மருந்து அளவில் கலந்து தரைப்பகுதி, மூட்டைகள் மீது தெளிக்க வேண்டும்.

விற்பனைக்கு நெல்லைக் கொண்டு வரும்போது ரகங்கள் வாரியாகக் கொண்டுவர வேண்டும். பூச்சிகள், பூஞ்சாணங்கள் தாக்கப்பட்ட நெல் மற்றும் ஈரப்பதத்தால் கெட்டுப்போன நெல்லை தனியாகப் பிரித்து விட வேண்டும்.

ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களிலும், கிராமங்களிலும் வேளாண் அலுவலரால் நெல் மணிகள் 4 தரங்களாகப் பிரிக்கப்படும். இங்கு ஈரப்பதம் மற்றும் தரங்களை இலவசமாக அறிந்து கொள்ளலாம்.

சிறு தானியங்கள்: சிறுதானியங்களான சோளம், கம்பு, ராகி, மக்காச் சோளம் ஆகியவற்றுக்கு மாவுச்சத்து, புரதச்சத்து அளவுகளுக்கேற்ப கூடுதல் விலை கிடைக்கும். எனவே, அறுவடைக்குப் பின்னர் செய் நேர்த்தி தொழில்நுட்ப முறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.

கதிர்கள் முதிர்ந்து இலைகள் பழுப்பு நிறமாக மாறியவுடன் கதிர்களை மட்டும் தனியாக அறுவடை செய்ய வேண்டும். மழை நேரங்களில் அறுவடை செய்தால் பூஞ்சாணம் தாக்கிய கதிர்களை தனியே பிரித்து காய வைக்க வேண்டும். காய வைத்த கதிர்களில் இருந்து மணிகளைப் பிரித்து எடுக்க கதிர் அடிக்கும் கருவிகள் அல்லது கல் உருளைகளைப் பயன்படுத்தி தானியத்தைப் பிரிக்க வேண்டும்.

பிரித்து எடுக்கப்பட்ட மணிகளை காற்றில் தூற்றிவிட்டு இலைகள், கருகுகளை நீக்க வேண்டும். விதைகளில் கல், மண், இதர தானியங்கள் மற்றும் உடைந்த தானியங்களைத் தனியாகப் பிரித்து நீக்கிவிட வேண்டும்.

சிறு தானியங்களை நன்கு காயவைத்து நிழலில் உலர்த்தி பின்னர் சுத்தமான கோணிப்பைகளில் நிரப்பி மூடி சேமிக்க வேண்டும்.

உள்புறம் சவ்வுத்தாள் பொருத்திய சாக்குப்பையில் தானியங்களைச் சேமித்தால் மழைக் காலங்களில் ஈரக் காற்றினால் பாதிப்பு ஏற்படாது. அதிக காலம் சேமிக்க வேண்டியிருந்தால் தானியங்களை கலன்களில் இட்டு மூடி சேமிக்க வேண்டும்.

மக்காச் சோளத்தை கதிர் அடிக்கும் இயந்திரம் மூலமாக எளிதில் பிரிக்கலாம். மக்காச் சோளத்தை நன்கு காய வைக்காவிடில் விரைவில் வண்டுகள் தாக்கி, தரம் பாதிக்கப்படும். காய வைத்த தானியங்களை சேமித்து வைக்கும்போது மாதம் ஒருமுறை வெயிலில் உலர்த்தி சேமிக்க வேண்டும். இல்லையெனில், தரம் பாதித்து நல்ல விலை கிடைக்காமல் போகும் நிலை ஏற்படும்.

பயறு வகைகள்: உளுந்து, பாசிப்பயறு, துவரை, தட்டைப்பயறு ஆகிய பயறு வகைகளின் கூடுதல் வருமானம் என்பது பருப்பு சதவீதத்தைப் பொருத்து அமையும். பயறு வகைகள் 85 சதவீதம் பருப்பு அளவும், கூடுதல் விலையும் கிடைத்திட அறுவடைக்குப் பிந்தைய செய் நேர்த்தி தொழில்நுட்பம் அவசியம்.

பயறு வகை காய்கள் நெற்றுகளாக மாறியும், இலைகள் பழுத்து உதிர ஆரம்பிக்கும்போது அறுவடை செய்ய வேண்டும். நெற்றுக்கள் காப்பிக்கொட்டி நிறமாகி இருந்தால் நெற்றுகளைப் பிரித்து எடுக்க வேண்டும். செடியிலிருந்து பிரித்து எடுக்கப்பட்ட நெற்றுக்களை காயவைத்து விதைகளைப் பிரித்து எடுத்து சுத்தம் செய்ய வேண்டும்.

பிரித்து எடுத்த விதைகளில் கலந்துள்ள கல், மண், தூசி மற்றும் சருகுகள், முதிராத விதைகள், பூச்சி நோய் தாக்கிய விதைகளை தனியாக நீக்க வேண்டும்.

விதைகளில் ஈரப்பதம் 12 சதவீதத்துக்குள் இருக்குமாறு நன்கு காய வைக்க வேண்டும். உணவுக்காக நீண்ட நாள்கள் சேமிக்க விதைகளை வெயிலில் காய வைத்து, பின்னர் ஒரு கிலோ விதைக்கு 5 மில்லி நல்லெண்ணெய் தடவி நிழலில் உலர விட்டு சேமிக்கலாம்.

துவரை விதைக்கு செம்மண் தடவி காய வைத்து சேமிக்கலாம். பயறு வகை விதைகள் சிறப்பு, நல்லது, சுமார், சாதாரணம் என 4 தரமாக ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பிரிக்கப்படும்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

30.05.2013 A.M

## "1000 அடி' "போர்' அமைத்தாலும் சொட்டுநீர் இல்லை பராமரிப்பின்றி வறண்ட செல்லூர் கண்மாய்

மதுரை:மதுரையில், நிலத்தடி நீர்வளம் மிக்க செல்லூரில், இன்று நிலத்தடி நீர் அதல பாதாளத்திற்கு சென்று விட்டது. 1000 அடிக்கு "போர்வெல்' அமைத்தாலும் சொட்டுநீர் இல்லை. கண்மாயை காக்க வேண்டிய பொதுப்பணித்துறை கைங்கரியத்தால், மக்களின் வாழ்வாதாரம் கேள்விக்குறி ஆகியுள்ளது. நிலத்தடி நீரை காக்க போராடும் நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர்.செல்லூர், வண்டியூர், மாடக்குளம் கண்மாய்கள், மதுரையின் முக்கிய நீராதாரமாக உள்ளன. 136 ஏக்கர் பரப்பளவு கொண்ட செல்லூர் கண்மாய் 20 அடி ஆழம் கொண்டது. 1990ம் ஆண்டு வரை கண்மாய் வறண்டது இல்லை. சாத்தையாறு அணையில் இருந்து நேரடியாக செல்லூர் மற்றும் தத்தனேரி கண்மாய்களை நிரப்ப தனி கால்வாய் உள்ளது. கண்மாயில் தண்ணீர் தேங்கி கடல் போல் காட்சியளிக்கும். இதன்மூலம் செல்லூர், தல்லாகுளம், மீனாம்பாள்புரம், பீபீ குளம் பகுதிகளில், நிலத்தடி நீர் அதிகரிக்கும். முன்பு வீடுகளில் கிணறு இருந்தது. எட்டி எடுக்கும் அளவிற்கு கிணற்றில் தண்ணீர் ததும்பி நிற்கும்.சொட்டு தண்ணீர் கூட இல்லை: செல்லூர் கண்மாய் வறண்டு, பாளம், பாளமாக வெடித்து, தற்போது வறட்சியின் உக்கிரத்தை காட்டுகிறது. தெரு குப்பை, இறைச்சி கழிவுகள், பாலிதீன் பைகளை, இங்கு கொட்டி பாழ்படுத்துகின்றனர். சிலர், கழிப்பிடமாக பயன்டுத்துகின்றனர். கண்மாயில் நிரந்தரமாக தண்ணீர் தேக்கவும், நீர்வரத்து கால்வாய்களில் ஆக்கிரமிப்புக்களை அகற்றவும், கால்வாய்களில் உடைந்த பகுதிகளை சரிசெய்யவும் பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்கவில்லை. பராமரிப்பு இன்றி கண்மாய் கைவிடப்பட்டது. இதனால், 1990க்கு பின் கண்மாய் படிப்படியாக வறட்சியை கண்டது. பொதுப்பணித்துறை கைங்கரியத்தால் தற்போது ஒரு சொட்டு தண்ணீர் கூட கண்மாயில் இல்லை.மார்க்சிஸ்ட் கட்சி முன்னாள் கவுன்சிலர் கே.திலகர்: இக்கண்மாயின் கரைகளில், கற்கள் பதிக்கப்பட்டு மண் அரிப்பில் இருந்து காக்கப்பட்டன. முன்பு, 15 அடிக்கு மேல் ஆழத்தில் தண்ணீர் தேங்கி நின்றது. இக்கரையில் இருந்து அக்கரைக்கு நீந்தி செல்வர். பரிசலில் சென்று மீன் பிடிப்பர். அதெல்லாம் ஒரு காலம். பராமரிப்பின்றி கண்மாய் பாழ்பட்டு விட்டது.

உடனடியாக கண்மாயை தூர்வாரி, நிரந்தரமாக தண்ணீர் தேக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தாமதித்தால் மக்கள் ஒருங்கிணைந்து கண்மாயை தூர்வாருவோம்.ஜனதா தளம் நகர் செயலாளர் முருகப்பன்: செல்லூர் 50 அடி ரோட்டில், என் வீடு உள்ளது. 1984ல், 50 அடிக்கு "போர்வெல்' அமைக்கப்பட்டது. இப்போது 50 அடி ரோடு 6வது தெருவில், 965 அடிக்கு "போர்வெல்' அமைத்தும் தண்ணீர் இல்லை. செல்லூர் கண்மாயை பராமரிக்காமல் விட்டதால், நிலத்தடி நீர் அதல, பாதாளத்திற்கு சென்று விட்டது. நிலத்தடி நீரை காக்ககோரி மக்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளும் அளவுக்கு நிலைமை உள்ளது. நிலத்தடி நீரை காக்க தொலைநோக்கு பார்வையுடன் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றனர்.மாடக்குளம், செல்லூர் கண்மாய்களை தூர்வாரி, நிரந்தரமாக தண்ணீர் தேக்க, அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இதன் மூலம் நிலத்தடி நீரை காக்க முடியும். மக்களுக்கு தண்ணீர் பஞ்சமும் ஏற்படாது.

## வறட்சி பாதிப்பு கணக்கெடுப்பு புகாரால் நிவாரணத் தொகையை நிறுத்த உத்தரவு

மதுரை:மதுரை மாவட்டத்தில் வறட்சி நிவாரணம் குறித்த கணக்கெடுப்பு முறையாக நடக்கவில்லை என, விவசாயிகளின் புகார் மனுக்கள் குவிகின்றன. இதையடுத்து, வறட்சி நிவாரண தொகையில் ஒருபகுதியை நிறுத்தி வைக்க கலெக்டர் அன்சுல்மிஸ்ரா உத்தரவிட்டார்.பருவமழைகள் பொய்த்ததால், குறுவை, சம்பா சாகுபடிகள் பாதித்தன. மதுரையை வறட்சி மாவட்டமாக அறிவித்து, நிவாரணமாக ரூ. 26 கோடி ஒதுக்கப்பட்டது. நெல்சாகுபடி பாதிப்புக்கு ரூ. 5 ஆயிரம், தோட்டக்கலை பயிருக்கு ரூ. 3 ஆயிரம், மானாவாரி பாதிப்புக்கு ரூ. 2 ஆயிரம் வீதம் வழங்கப்படுகிறது. இதனைப் பெற "அடங்கல்' பெற்று சமர்ப்பிக்க வேண்டும், என்பதால் தாலுகா அலுவலகங்களில் விவசாயிகள் குவிகின்றனர்.முறையான கணக்கெடுப்பா:இந்நிலையில், வறட்சி குறித்த கணக்கெடுப்பு முறைப்படி நடக்கவில்லை என, விவசாயிகள் பலர், கலெக்டரிடம் புகார் மனு அளித்தனர். குறிப்பாக, விவசாய சங்க நிர்வாகி செல்லக்கண்ணு தலைமையில், "செல்லம்பட்டி, திருமங்கலம் யூனியன்களில் 3 கிராமங்களில் கணக்கெடுப்பே நடக்கவில்லை' என, 500 பேர் புகார் மனு அளித்தனர். இதையடுத்து, விசாரணை நடத்த கலெக்டர் உத்தரவிட்டார். நிவாரணத்தை பொறுத்தவரை, ஒரு நிலத்தில் சாகுபடி செய்து, அதில் 50 சதவீதத்திற்கு மேல், பயிர் கருகியோ, வேறு வகையிலோ பாதித்து இருந்தால்தான் நிவாரணம் வழங்க வேண்டும் என்பது விதி. ஆனால், சாகுபடி பரப்பை கூடுதலாக காட்டியும், சாகுபடியே செய்யாத இடங்கள் குறித்தும், கணக்கெடுப்பு நடத்தாமலும் பாதிப்படைந்ததாக கூறி சிலர் நிவாரணம் பெற்றுள்ளனர் என்ற குற்றச்சாட்டு எழுந்துள்ளது. வாய்மொழி உத்தரவு:

வருவாய் துறையில், கிராம அலுவலர்களே, சாகுபடி துவங்கும் போதும், அறுவடையின் போதும் அதை கிராம "அடங்கல்' நோட்டில் எழுதுவர். பாதிப்பு என வரும்போது, அறுவடைக்கு முன்பே, விவசாயத் துறையினரை அழைத்துச் சென்று, சாகுபடி பாதிப்பை அறிய வேண்டும். ஆனால் இவை எதுவுமே எங்கும் பின்பற்றப்படவில்லை. கடந்த ஜனவரி, பிப்ரவரி மத்தியில் அறுவடை பணிகள் பல இடங்களில் முடிவடைந்தன. பிப்ரவரியில்தான் வறட்சி மாவட்டமாக அறிவிக்கப்பட்டு, கணக்கெடுக்கும் பணிநடந்தது. எனவே, அதன் பின் கேள்விப்பட்டதை கணக்கில் கொண்டு வந்துள்ளதாக குற்றம்சாட்டுகின்றனர். இதனால், வீட்டுமனைகளாக மாறிய விளைநிலங்கள்கூட கணக்கெடுப்பில் இடம் பெற்றுள்ளன. இதில், அரசியல் தலையீடும் உள்ளதாக விவசாயிகள் புலம்புகின்றனர்.மதுரைக்கென ஒதுக்கிய தொகை ரூ. 26 கோடியில், இதுவரை ரூ. 20 கோடி அளவுக்கு பட்டுவாடா செய்யப்பட்டுள்ளது. கணக்கெடுப்பு குறித்த விசாரணையால், ரூ.23 கோடிக்கு பட்டுவாடா செய்யவும், மீதியுள்ள ரூ. 3 கோடியை தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படியும் கலெக்டர் உத்தரவிட்டுள்ளார். கணக்கெடுப்பில் தவறு நடந்திருக்கலாம் என்று சந்தேகப்படும் விவசாயிகளுக்கு மட்டும் நிவாரணத் தொகையை நிறுத்தி வைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. விசாரணைக்குப்பின், அவர்கள் பாதிப்பு உண்மையென அறியவந்தால் நிவாரணம் வழங்கப்படும். விவசாயிகள் புகாரை பொறுத்தவரை, கணக்கெடுப்பு நடத்தாத பகுதியில் மீண்டும் கணக்கெடுப்பு நடத்தி, அரசிடம் வலியுறுத்தி, கூடுதல் நிவாரணத் தொகையை பெற்றுத் தரவேண்டும். இனிஅதற்கு வாய்ப்பு இல்லை எனும்போது, தவறான பயனாளிகளை கண்டறிந்து நீக்கி, உண்மை பயனாளிகளுக்கு வழங்க வேண்டும்.பாதிப்பு எவ்வளவுமதுரை மாவட்டத்தில் நெல் சாகுபடி 8846 எக்டேரிலும், சிறுதானியங்கள் 11,582, பயறு வகைகள் 3966, எண்ணெய் வித்துக்கள் 697, பருத்தி 3547, கரும்பு 142 எக்டேரிலுமாக மொத்தம் 28,780 எக்டேரில் பாதிப்படைந்துள்ளதாக கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

## விவசாயிகளுக்கான வறட்சி நிவாரண நிதியில்... வசூல் கூட்டுறவு சங்கங்களில்"எதிபார்ப்பு' நிலவுவதாக புகார்

தாண்டிக்குடி:கே.சி.பட்டி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் வறட்சி நிவாரண நிதியில் வசூல் வேட்டையில் ஈடுபடும் நிர்வாகிகளால் பயனாளிகள் அதிருப்தியடைந்துள்ளனர்.கூட்டுறவு வங்கியில் கே.சி.பட்டி, குப்பம்மாள்பட்டி, பெரியூர் ஊராட்சி பகுதியை சேர்ந்த விவசாயிகள் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்டோருக்கு தமிழக அரசின் வறட்சி நிவாரண நிதியாக ரூ.54 லட்சத்தது 8 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது. இவை கடந்த வாரம் சம்மந்தப்பட்ட விவசாயிகளுக்கு கூட்டுறவு கடன் சங்கம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் புதிததாக பதவியேற்றுள்ள கூட்டுறவு கடன் சங்க தலைவர் மற்றும் நிர்வாகிகள் பயனாளிகளிடம் தொகைக்கு ஏற்றாற் போல் கட்டாய வசூலில் ஈடுபடுவதாக புகார் எழுந்துள்ளது. விவசாயிகள் கூறுகையில்: ""நான்காயிரம் முதல் எட்டாயிரம் வரை ரூ.500 ம், அதற்கு மேற்பட்ட தொகைக்கு ஆயிரம் வரை கட்டாய வசூலில் ஈடுபடுகின்றனர். ஏன் என கேட்டப்போது மேலிடம் வரை கொடுக்க வேண்டியதுள்ளது என கூறுகின்றனர்," என்றனர். கே.சி.பட்டி கூட்டுறவு கடன் சங்க செயலாளர் சொக்கலிங்கம் கூறுகையில்: ""விவசாயிகளிடம் யாரும் வசூலில் ஈடுபடவில்லை. டெபாசிட்டாக ரூ.100 மட்டுமே பெறுகிறோம்," என்றார். கூட்டுறவு கடன் சங்க தலைவர் சுப்ரமணியன் கூறுகையில்; ""பயனாளிகளிடம் யாரும் வசூல் செய்யவில்லை. அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக வேண்டாதவர்கள் கூறுகின்றனர்," என்றார்.இந்த நிலை மாவட்டத்திலுள்ள பெரும்பாலான கூட்டுறவு சங்கங்களில் உள்ளது, என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். கூட்டுறவு சங்கங்களில் புதிதாக பொறுப்பேற்றுள்ள ஆளுங்கட்சியினர், பதவியேற்றவுடன் வசூலில் ஈடுபடுவதாக பரவலாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. மாவட்ட நிர்வாகமும், கூட்டுறவு துறை அதிகாரிகளும், வறட்சி நிவாரணத்தில் கமிஷன் பெறுவதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## விவசாயிகளுக்கான நிவாரணத் தொகை ரூ.100 மட்டுமே சேமிப்பாக பிடித்தம் முறைகேடு ஊழியர்களுக்கு எச்சரிக்கை

முதுகுளத்தூர்:"விவசாயிகளுக்கு வழங்கப்படும் வறட்சி நிவாரண தொகையில், சேமிப்பு நிதியாக 100 ரூபாய் மட்டுமே பிடித்தம் செய்ய வேண்டும். முறைகேடு ஊழியர்கள் "சஸ்பெண்ட்' செய்யப்படுவர்' என, பரமக்குடி ஆர்.டி.ஓ., குணாளன் எச்சரித்துள்ளார். முதுகுளத்தூர் மற்றும் சுற்றுப்பகுதி கூட்டுறவு சங்கங்களில், விவசாயிகளுக்கு வழங்கப்படும், வறட்சி நிவாரண தொகையில், சேமிப்பு நிதி என வரைமுறை இல்லாமல் பிடித்தம் செய்யப்பட்டு வந்தது. இதையடுத்து பரமக்குடி ஆர்.டி.ஓ., குணாளன், முதுகுளத்தூர் கூட்டுறவு சங்கத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டார்.இதுகுறித்து அவர் கூறியதாவது: விவசாயிகளுக்கு வழங்கப்படும் வறட்சி நிவாரண தொகையில், கமிஷன் வசூலிக்கக்கூடாது என, உத்தரவிடபட்டுள்ளது. கூட்டுறவு சங்கங்கள் தங்களது விருப்பத்திற்கேற்ப, வங்கி சேமிப்பு என்ற பெயரில் 1,000 ரூபாய் வரை வறட்சி நிவாரணத்தொகையில் பிடித்தம் செய்து வருகின்றனர். இதுகுறித்து ஆய்வு மேற்கொண்டபோது, பணம் ஏய்ப்பு நடக்கவில்லை.வறட்சி நிவாரண தொகையில், இனி சேமிப்பு நிதியாக, ஒவ்வொரு விவசாயியிடமும் தலா 100 ரூபாய் மட்டுமே பிடித்தம் செய்யவேண்டும், கூடுதலாக வரவு வைக்க கட்டாயபடுத்தக்கூடாது. இதில் ஏதும் முறைகேடு இருப்பின், கூட்டுறவு சங்க ஊழியர்கள் "சஸ்பெண்ட்' செய்ய பரிந்துரை செய்யப்படுவர். மேலும் முறையாக விவசாயம்

செய்த விவசாயிகளுக்கும், வறட்சி நிவாரண தொகை ஒதுக்கீடுஇல்லை என, பல விவசாயிகள் புகார் கூறி வருகின்றனர். இதுகுறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும், என்றார்.

## அதிகாரிகள், ஊழியர்கள் பற்றாக்குறையால் பணிகள்... பாதிக்கும் காலி பணியிடங்களை வேகமாக நிரப்புமா மாநகராட்சி?

சென்னை:சென்னை மாநகராட்சியில் பல்வேறு முக்கிய துறைகளில், தலைமை கண்காணிப்பு பொறியாளர்கள் உட்பட பணியாளர்கள் பற்றாக்குறை அதிகரித்துள்ளதால், வளர்ச்சி பணிகள் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது. காலி பணியிடங்களை மாநகராட்சி வேகமாக நிரப்ப வேண்டும் என, கோரிக்கை எழுந்துள்ளது.சென்னை மாநகராட்சியில் இயந்திர பொறியியல் துறை, சுகாதார துறை, பணிகள் துறை, வருவாய் மற்றும் நிதி துறை, பணியாளர் நிர்வாகம் உள்ளிட்டஒட்டுமொத்த துறைகளிலும் சேர்த்து மொத்தம் 3,000க்கும் மேற்பட்ட பணியிடங்கள் காலியாக உள்ளன. கடந்த சில ஆண்டுகளாக புதிய நியமனம் மேற்கொள்ளப்படவில்லை.வளர்ச்சி பணிகள்குப்பை மாற்று தொழிற்சாலை திட்டம், "மெகா சிட்டி' திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த சாலை பணிகள், ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்பு திட்டத்தின் கீழ் மழைநீர் வடிகால்வாய், நீர்வழித்தடங்களை மேம்படுத்தும் திட்டம், புதிய மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அவசர கால பிரசவ மையங்களை மேம்படுத்தும் திட்டம், பல்வேறு கட்டுமான பணிகள், கடற்கரையை அழகுபடுத்தும் திட்டம், நவீன நிழற்குடைகள், நவீன கழிப்பறைகள் என, மாநகராட்சியில் பல்வேறு வளர்ச்சி பணிகளுக்கு திட்டமிடப்பட்டுள்ளன.இதில், பல பணிகள் துவங்கிஉள்ளன. சில பணிகள் துவங்கப்பட உள்ளன. இந்த நிலையில், இந்த திட்டங்களை செயல்படுத்தும் பொறுப்பில் இருந்த பல துறைகளின் கண்காணிப்பு பொறியாளர்கள், கடந்த சில மாதங்களாக அடுத்தடுத்து பணி ஓய்வு பெற்றனர்.இன்னும் சில மாதங்கள்காலியாக உள்ள பொறியாளர் பணியிடங்களை, மற்ற துறை பொறியாளர்கள், கூடுதல் பொறுப்பாக கவனித்து வருகின்றனர். இதனால் இரண்டு துறை பணிகளையும் அவர்களால் சரியாக கவனிக்க முடியாதசூழல் ஏற்பட்டுள்ளது.காலியாக உள்ள பணியிடங்களுக்கு புதிய பொறியாளர்களை நியமனம் செய்ய தகுதியானோர் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கான பதவி உயர்வுக்கு அனுமதி வழங்க அரசை வலியுறுத்தி, சமீபத்தில் நடந்த மாநகராட்சி மன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.அரசு அனுமதி பெற்று, இந்த பணியிடங்களை நிரப்ப இன்னும் சில மாதங்கள் ஆகும் என்று தெரிகிறது. அதே நேரம் பதவி உயர்வு பெற்றோரின் பணியிடங்களையும் நிரப்ப வேண்டிய கட்டாயம் உள்ளது.படிப்படியாக நியமனம்இது குறித்து மாநகராட்சி அதிகாரி ஒருவர் கூறியதாவது:கடந்த

சில ஆண்டுகளாக, புதிய பணியாளர்கள் நியமனம் செய்யப்படாததே பணியாளர் பற்றாக்குறைக்கு காரணம். சமீபகாலமாக பணி நியமனம் படிப்படியாக செய்யப்பட்டு வருகிறது.இதுவரை காலியாக இருந்த பணியிடங்களுக்கு 800 பேர் தேர்வு செய்யப்பட்டு, பணியாணை வழங்கப்பட்டுள்ளது. இந்தாண்டு இறுதிக்குள் அனைத்து காலி பணியிடங்களையும் நிரப்பும் வகையில், முறையான அனுமதியுடன் பணியாளர் தேர்வு நடந்து வருகிறது. கருணை அடிப்படையிலும், பணி மூப்பு அடிப்படையில் நியமனம் நடந்து வருகிறது.இவ்வாறு அவர் கூறினார்.வருவாய், சுகாதாரம் தப்புமா?சென்னையில் இயங்கி வரும் 200 மலிவு விலை உணவகங்களை, மாநகராட்சியின் சுகாதாரம் மற்றும் வருவாய் துறையை சேர்ந்த பணியாளர்கள் கவனித்து வருகின்றனர். இதனால் அந்த துறை பணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. மலிவு விலை உணவகங்களுக்கு என, தனியாக பணியாளர்களை தேர்வு செய்ய திட்டமிடப்பட்டு, அதற்கான கோப்பு அரசின் அனுமதிக்கு அனுப்பி வைக்கப்பட்டு உள்ளது. இதற்கும் விரைந்து அனுமதி வழங் கினால் மட்டுமே, மாநகராட்சியின் சுகாதாரம் மற்றும் வருவாய் துறை பணிகள் பாதிப்பில்லாமல் இயங்கும்.

## எள் விலை வீழ்ச்சி: விவசாயிகள் அதிர்ச்சி

உளுந்தூர்பேட்டை:கடும் விலை வீழ்ச்சியாலும், மழை பொய்த்ததாலும் எள் பயிரிட்ட விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.எண்ணை வித்து பயிரான எள், ஏப்ரல் மாதம் துவங்கி ஜூன், ஜூலை மாதத்திற்குள் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படுகிறது.கடந்த ஆண்டு உளுந்தூர்பேட்டை, திருநாவலூர் ஒன்றியத்தில் எள் இறவை (பாசன பகுதி) பயிராக 4 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயிரிடப்பட்டிருந்தது. இந்தாண்டு ஏப்ரலில் மழை பெய்தது. இந்த மழையை நம்பி விவசாயிகள் அதிகளவில் எள் பயிரிட்டிருந்தனர். மேலும், எள் ஒரு மூட்டை ரூ. 10 ஆயிரம் முதல் ரூ. 12 ஆயிரம் வரை விற்றது. இதனால் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் இறவை பகுதியில் 3 ஆயிரம் ஏக்கரிலும் மானா வாரி பகுதியில் 4 ஆயிரம் ஏக்கரிலும் எள் பயிரிட்டிருந்தனர்.எள் அறுவடையின் போது இறவை பகுதியில் 5 முதல் 6 மூட்டைகள் வரை கிடைக்கும். குறைந்த பட்சம் 4 மூட்டைகள் கிடைக்கும். மானாவாரியில் ஒரு மூட்டை கிடைக்கும்.ஆனால் மழை பொய்த்ததால் எள் உற்பத்தி குறைந்தது. எள் விலை வீழ்ச்சியடைந்ததால் கமிட்டிக்கு வரத்தும் குறைந்தது. கடந்த 21ம் தேதி எள் ரூ.5,429 முதல் ரூ. 6,199 வரை விற்பனையானது. நேற்று முன்தினம் ரூ. 5,510 முதல் ரூ. 5,655 வரை

விற்பனையானது. மேலும், எள் விலை வீழ்ச்சியடையுமோ என்ற அச்சத்தில் விவசாயிகள் உள்ளனர்.

### பருவமழை பொய்த்ததால் நெல் சாகுபடி குறைந்தது

சங்கராபுரம்:பருவமழை பொய்த்ததால் சங்கராபுரம் பகுதியில் நெல் சாகுபடி பரப்பு குறைந்தது. சங்கராபுரம் பகுதியில் விவசாயம் பிரதான தொழி லாக இருந்தது. மணி நதி, கோமுகி அணை மூலம் 10 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெற்றனர். ஆற்று வாய்க்கா ல் மூலம் ஏரிகளுக்கு நீர்வரத்து கிடைப்பதால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்து விவசாயிகள் உற்சாகத்துடன் விவசாயம் செய்து வந்தனர்.இந்நிலையில் இரு ஆண்டாக பருவமழை பொய்த்ததால் சங்கராபுரம் பகுதியில் உள்ள விவசாய கிணறுகளில் நீர் மட்டம் நாளுக்கு நாள் குறைந்தது. கிணற்று பாசனத்தை நம்பி விவசாயம் செய்து வந்த விவசாயிகள் இந்த ஆண்டு தண்ணீர் பற்றாக்குறை, மின் வெட்டு காரணமாக கோடை உழவு செய்யாமல் உள்ளனர். இதனால் சங்கராபுரம் பகுதியில் நெல் சாகுபடி பரப்பு வெகுவாக குறைந்துள்ளது.

### தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் உறுப்பினர்களுக்கு கடன் தொகை வழங்கல்

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கப் பணியாளர்களுக்கு கடன் வழங்கப்பட்டதுவிழுப்புரம் மாவட்ட தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க பணியாளர்கள் கூட்டுறவு சிக்கனம் மற்றும் கடன் சங்கத்தின் புதிய அலுவலக திறப்பு விழா மற்றும் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கும் விழா நடந்தது. சங்கத் தலைவர் கிருஷ்ணதேவன் தலைமை தாங்கினார். துணைத் தலைவர் சுப்ரமணியன், இயக்குனர்கள் மகாதேவன், உதயசூரியன், ராஜேந்திரன், குமார், ராஜம், கலைவாணி, லதா மற்றும் செல்வராஜ் முன்னிலை வகித்தனர். வங்கி செயலாளர் குமரவேல் வரவேற்றார்.சங்க புதிய முகவரியான, எண். 980, சோழன் தெரு, சுதாகர் நகர், ஏ.எஸ்.சி.திருமண மண்டபம் அருகில் உள்ள அலுவலகத்தை தொடர்பு கொள்ள வேண்டும். கடன் கோரி விண்ணப்பித்த 102 பேருக்கு கடன் தொகையும் வழங்கப்பட்டது.அண்ணா தொழிற்சங்க தலைவர் சஞ்சீவி, பொரு ளாளர் சேகர், வீட்டு வசதி கடன் சங்கத் தலைவர் கோவிந்தன், சி.ஐ.டி.யு. மாவட்ட செயலாளர் காமராஜ், நிர்வாகிகள் ஜெயராமன், கலியபெருமாள், ராமநாதன், கணேசன், பாஸ்கர், ராமமூர்த்தி, சவுந்தரராஜன் மற்றும் முத்துலிங்கம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## அரசின் இலவச ஆடுகள் திட்டத்தின்படி29 ஆயிரத்து 700 ஆட்டுக்குட்டிகள் உற்பத்தி கலெக்டர் சம்பத் தகவல்

விழுப்புரம்:விழுப்புரம் மாவட்டத்தில் இலவச ஆடுகள் வழங்கும் திட்டத்தின்படி 29 ஆயிரத்து 700 ஆட்டு குட்டிகள் கடந்த 2 ஆண்டுகளில் உற்பத்தியாகி உள்ளதாக கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பு:மாவட்டத்தில் உள்ள 381 கிராமங்களில் 17 ஆயிரத்து 19 பயனாளிகளுக்கு மாநில அரசு சார்பில் இலவச ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது. மொத்தம் 21 கோடியே 69 லட்சம் மதிப்பில் 68 ஆயிரத்து 76 ஆடுகள் வழங்கப்பட்டது.கடந்த இரு ஆண்டுகளில் 3 முறை ஆடுகள் குட் டிகளை ஈன்றுள்ளன. தற்போது 29 ஆயிரத்து 700 ஆட்டு குட்டிகள் உள்ளது. வெள்ளாடு மற்றும் செம்மறி ஆடுகள் வழங்க பயனாளிகள் தேர்வு செய்ய கிராம அளவிலான குழு அமைக்கப்பட்டுள்ளது.இதில், ஊராட்சித் தலைவர், துணைத் தலைவர், ஆதித்திராவிடர் பழங் குடியினத்தைச் சேர்ந்த மிகவும் மூத்த வார்டு உறுப் பினர், ஊராட்சி அளவிலான ஒருங்கிணைப்பாளர், சுய உதவிக்குழுவைச் சேர்ந்த பிரதிநிதி, கால்நடை உதவி மருத்துவர், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஆகியோர் இடம் பெறுவர்.இத்திட்டத்தில் தேர்வு செய்யப்படும் பயனாளி பெண்களாக இருக்க வேண்டும். நிரந்தரமாக அந்த கிராமத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும் உள்ளிட்ட விதிகளின்படி பயனாளிகள் தேர்வு செய்யப்படுகின்றனர்.இத்திட்டத்தின் செயல் பாடுகள் குறித்து பி.ஆர்.ஒ., சிங்காரம் மற்றும் குழுவினர் நேரில் ஆய்வு செய்தனர். சின்னசேலம் தாலுகா அம்மையகரம் கிராமத்தைச் சேர்ந்த முருகேசன் மனைவி பார்வதி, எலவடி ஊராட்சியைச் சேர்ந்த ராமசாமி மனைவி வெள்ளிக்கிளி மற்றும் சில பயனாளிகளை நேரில் சந்தித்து, திட்டப் பயன்களை கேட்டறிந்தனர்.கிராமப்புறங்களில் வசிக்கும் ஏழைகள் பயன்பெறும்வகையில் முதல்வர் ஜெ., அறிவித்த இத்திட்டம் மூலம் தங்கள் வாழ்வில் பொருளாதார ரீதியில் மிகுந்த முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.தமிழக அரசின் இத்திட்டத்தை, கிராமப்புற மக்கள் முழு அளவில் பயன்படுத்தி, வாழ்வில் மேம்பாடு அடைய முயற்சி மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

## சொட்டு நீர் பாசன பயிற்சி

திருக்கோவிலூர்:முகையூர் ஒன்றியம், கொடுங்கால் கிராமத்தில் சொட்டுநீர் பாசனம் குறித்து, விவசாயிகளுக்கு நேரடி செயல் விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.முன்னாள் எம்.எல்.ஏ., கோதண்டராமன் தலைமை தாங்கினார். சென்னை சர்க்கரை ஆலை முதுநிலை மேலாளர் பாலகிருஷ்ணன், நாகார்ஜூனா பெர்டிலைசர்ஸ் மண்டல மேலாளர் தண்டபாணி முன்னிலை வகித்தனர். பாலகிருஷ்ணன், தண்டபாணி செயல் விளக்கமளித்தனர்.வேளாண்மை உதவி இயக்குனர் கென்னடி ஜெபக்குமார், ஆத்மா தொழில்நுட்ப மேலாளர் செந்தில் குமார் மற்றும் பலர்

கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் திருமலை, கரும்பு அலுவலர் சசிகுமார் செய்திருந்தனர்.

## வேளாண்மை உற்பத்தியாளர் சங்க இயக்குனர்கள் போட்டியின்றி தேர்வு

திருத்தணி:தாலுகா வேளாண்மை உற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்க, 11 இயக்குனர்கள் போட்டியின்றி, நேற்று தேர்வு செய்யப்பட்டனர்.திருத்தணி தாலுகா வேளாண்மைஉற்பத்தியாளர்கள், கூட்டுறவு விற்பனை சங்க இயக்குனருக்கான, வேட்பு மனு தாக்கல், நேற்று முன்தினம் நடந்தது.கூட்டுறவு தேர்தல் அலுவலர் வாசுதேவசிங் வேட்பாளர்களிடமிருந்து, வேட்பு மனுக்கள் பெற்றுக் கொண்டார். மொத்தம், 11 பேர் வேட்பு மனு தாக்கல் செய்திருந்தனர்.இந்த மனுக்கள் மீதான, பரிசீலனை நேற்று நடந்தது. இதில், மனு தாக்கல் செய்த, 11 பேரும் இயக்குனர்களாக, போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். இவர்களில், தலைவர், துணை தலைவர் தேர்தல் விரைவில் தேர்தெடுக்கப்பட உள்ளனர். இதற்கான தேர்தல் தேதி,இன்னமும் அறிவிக்கப்படவில்லை.திருத்தணி ஒன்றியத்தில், மூன்று பேரும், ஆர்.கே.பேட்டை ஒன்றியத்தில், மூன்று பேரும், பள்ளிப்பட்டு ஒன்றியத்தில், இரண்டு பேரும், திருவாலங்காடு ஒன்றியத்தில், மூன்று பேரும் என, மொத்தம், 11 இயக்குனர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் என்பதுகுறிப்பிடத்தக்கது.

## "எள் சாகுபடியில் ஏகப்பட்ட லாபம்' பழவூர் விவசாயி பரிந்துரை

செய்யூர்:எள் சாகுபடி செய்வதன் மூலம், ஒரு ஏக்கருக்கு, 30 ஆயிரம் ரூபாய் லாபம் பெறலாம் என, சித்தாமூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட பழவூரைச் சேர்ந்த விவசாயி முனுசாமி தெரிவித்துள்ளார்.இதுகுறித்து, அவர் கூறியதாவது:எனக்கு சொந்தமாக, ஐந்து ஏக்கர் நிலம் உள்ளது. இதில், ஒன்றரை ஏக்கர் நிலத்தில், நெல் சாகு படியும், ஒரு ஏக்கர் நிலத்தில், எள் சாகு படியும் செய்துள்ளேன். ஒருஏக்கர் நெல் சாகுபடிக்கு, 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது.இதில், 5,000 ரூபாய் மட்டுமே லாபம் கிடைக்கிறது. அதுமட்டுமின்றி, அதிக நீர் பாசனம் செய்ய வேண்டியுள்ளது. ஆனால், ஒரு ஏக்கர் எள் சாகுபடியில், 30 ஆயிரம் ரூபாய் வரை லாபம் கிடைக்கிறது. நீர் பாசனமும் குறைவு தான்.முதலில், நன்றாக நிலத்தை உழ வேண்டும். பின்னர், இரண்டு கிலோ தரமான எள் விதையை, உழுத நிலத்தில் தூவி பரம்பு ஓட்ட வேண்டும். 5 - 8வது நாட்களில், செடிகள் முளைத்து விடும்.அதன் பின்னர், நீர் பாய்ச்ச வேண்டும். 25 - 30 நாட்களில், களை வெட்டி, உரம் இட்டு, மீண்டும் நீர் பாய்ச்ச வேண்டும். 10 - 15 நாட்களுக்கு ஒரு முறை, நீர் பாய்ச்சினால் போதும். 80வது நாளில், அறுவடைக்கு தயாராகி விடும்.ஒரு ஏக்கரில், 5 - 6 மூட்டை வரை கிடைக்கும். 80 கிலோ கொண்ட ஒரு மூட்டை, தற்போது, 6,000 வரை விற்பனை செய்யப்படுகிறது.ஒரு ஏக்கர் எள் சாகுபடி செய்ய, அனைத்து செலவுகளும் சேர்த்து, 6,000 ரூபாய்

செலவாகும். 30,000 ரூபாய் வரை லாபம் கிடைக்கும். தை மாதம் முதல் பங்குனி மாதம் வரை, எள் பயிரிட ஏற்ற காலமாகும். இந்த காலத்தில் பயிர் செய்தால், இன்னும் கூடுதல் மகசூல் கிடைக்கும்

## "6 சதவீத சேவை வரியை ரத்து செய்யுங்கள்' வேளாண் விற்பனை சங்கத்தில் முறையீடு

கோபிசெட்டிபாளையம்: பருவமழை ஏமாற்றத்தால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளிடம் பிடித்தம் செய்யப்படும், ஆறு சதவீத சேவை வரியை ரத்து செய்ய வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோபி சுற்று வட்டாரத்தில் டி.என்.பாளையம், நாகதேவன்பாளையம், வெள்ளாங்கோவில், கூகலூர், வெள்ளாளபாளையம், நல்லகவுண்டன்பாளையம் உட்பட, 30க்கும் மேற்பட்ட பகுதியில் ரொபஸ்ட்ரா, கதளி, தேன் வாழை, பச்சை நாடன், மொந்தன் ஆகிய வகை வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

கடந்தாண்டில், பருவமழை பொய்த்ததால், சொட்டு நீர் மூலம் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. அறுவடை செய்யப்படும் வாழை, கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

வாழை விற்பனை செய்ய, ஆறு சதவீத சேவை வரி வசூலிக்கின்றனர். வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளிடம், ஆறு சதவீத வரி மேலும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. விவசாயிகளுக்கு கட்டுப்படியான விலையை நிர்ணயிக்க வேண்டும் என விவசாயிகள் முறையிட்டனர்.

வாழை விவசாயிகள் கூறியதாவது:

வாழைக்கன்றுகள், 12 முதல், 15 ரூபாய் கொடுத்து வாங்கி வருகிறோம். குழி வெட்டு கூலி, நடவு கூலி என ஏக்கருக்கு, 50 ஆயிரம் முதல், 70 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது. பின், பராமரிப்பு செலவு தனி.

ஆயிரக்கணக்கில் செலவு செய்து வாழை பயிரிட்டுள்ள நிலையில், வாழையில் இலை கருகல் நோய் பரவலாக தாக்கி உள்ளது. அறுவடை செய்யப்படும் வாழை, கோபி வேளாண்மை உற்பத்தி மற்றும் விற்பனை சங்கத்தில் விற்பனை செய்யப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி, கதளி ஒரு கிலோ, 25 ரூபாய், நேந்திரம் ஒரு கிலோ, 26 ரூபாய், ரஸ்தாளி ஒரு தார், 350 ரூபாய், செவ்வாழை, 600 ரூபாய், ரோபஸ்டரா, 240 ரூபாய், மொத்தன், 300 ரூபாய், பச்சைநாடன், 275 ரூபாய், பூவன், 380 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

வாழையை பொருத்தவரையில் ஓராண்டு பயிரிட்டால், இரண்டு அல்லது, மூன்று ஆண்டுகள் வரை வாழை குலை அறுவடை செய்யலாம்.

முதலில் வரும் குலை நன்றாக இருக்கும். அடுத்த ஆண்டு பக்கவாட்டு கன்றுகள் மூலம் குலை வரும் என்பதால், தார் பிடிப்பு குறைவாக காணப்படும்.

தண்ணீர் பற்றாகுறையால், இரண்டாம் ஆண்டு வாழை குலை பிடிக்கவில்லை. பல்வேறு சிரமங்களுக்கு இடையில் வாழை அறுவடை செய்து விற்பனை செய்தால், ஆறு சதவீத சேவை வரி பிடித்தம் செய்யப்படுகிறது.
தண்ணீர் பற்றாகுறை நேரத்தில் சிரமப்படும் விவசாயிகளிடம் சேவை வரி பிடித்தம் செய்வதை ரத்து செய்ய வேண்டும். விவசாயிகளுக்கு கட்டுபடியான விலையை நிர்ணயிக்க வேண்டும், என்றனர்.

## மீன்வளர்ச்சி வாரிய திட்டங்களை மீனவர்கள் பயன்படுத்தி கொள்ள வேண்டும்

தூத்துக்குடி:தேசிய மீன்வளர்ச்சி வாரியத்தின் கீழ் உள்ள திட்டங்களை மீனவர்கள் நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்று மாவட்ட கலெக்டர் ஆஷீஷ்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.
இது குறித்து கலெக்டர் வெளியிட்டுள்ள அறிக்கையில் றியிருப்பதாவது; தூத்துக்குடி மாவட்டத்தின் முக்கிய தொழிலாக மீன்பிடித் தொழில் விளங்கி வருகிறது. அதனுடன் பெரிய அளவில் மீன் பதனிடும் தொழிலும், சிறிய அளவில் மீன் வளர்ப்பு தொழிலும் மீனவர்களாலும் மற்றும் இதர மக்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும் மீனவர்களை ஊக்குவிக்கும் விதமாக தேசிய மீன்வளர்ச்சி வாரியத்தின் கீழ் உள்ள திட்டங்களை பயன்படுத்தி கொள்ள வேண்டும். தேசிய மீன்வளர்ச்சி வாரியம் மற்றும் அமைப்பானது மத்திய அரசால் நம் நாட்டின் மீன்வளத்தை அதிகரிக்கும் வகையில் ஏற்படுத்தப்பட்டு, ஆந்திர மாநிலம் ஐதராபாத் நகரில் செயல்பட்டு வருகிறது. இந்த வாரியம் மூலம் மீன் குஞ்சு உற்பத்தி, மீன்வளர்ப்பு, மீன்களை சந்தைப்படுத்துதல், மீன் பதனம், சில்லறை மீன் விற்பனை அங்காடிகள், மொத்த விற்பனை நிலையங்கள், விற்பனை வாகனங்கள் மற்றும் இதர வளர்ச்சி பணிகளுக்கு என்று மானியத்துடன் கூடிய திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
தனிநபர்கள், விவசாயிகள், சுய உதவிக்குழுவினர் மற்றும் கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு ஏற்றவாறு மானியத்துடன் கூடிய பல்வேறு திட்டங்கள் வழங்கப்பட உள்ளன. இதனால் இந்த திட்டத்தை பயன்படுத்தி கொள்ளும் தனிநபர் மற்றும் சுய உதவிக்குழு, கூட்டுறவு சங்க உறுப்பினர்களின் தனிநபர் வரு மானம் உயர்வதுடன் நாட்டின் ஒட்டு மொத்த மீன் உற்பத்தியை அதிகரிக்கவும் வாய்ப்பு ஏற்படுகிறது. எனவே மீன் தொழிலில் ஆர்வம் உள்ள தனிநபர்கள், மகளிர், ஆண்கள் சுய உதவிக்குழுவினர் மற்றும் கூட்டுறவு சங்கத்தினர் தேசிய மீன்வளர்ச்சி வாரிய திட்டங்களை கணிணி வலைத்தள முகவரியில் டttணீ://ணஹூஞீஆ/ச்ணீ.ணடிஞ்.டிண திட்டங்களை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். அல்லது மீன்துறை உதவி இயக்குனர் (கடல்வளம்) மீன்பிடி துறைமுக வளாகம், தெற்கு கடற்கரை சாலை, தூத்துக்குடி முகவரியில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு கலெக்டர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு ரூ. 103 கோடி ரூபாய் வறட்சி நிவாரணம்

தூத்துக்குடி:தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்குவது குறித்து மாவட்ட கலெக்டர் ஆஷீஷ்குமார் புதிய அறிவிப்பினை வெளியிட்டுள்ளார். இதனை விவசாயிகள் பின்பற்றுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

இது குறித்து கலெக்டர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது;

தூத்துக்குடி மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை தமிழக அரசின் நிதியமைச்சர் தலைமையிலான உயர்மட்டக்குழு ஆய்வு செய்த பின்னர் தூத்துக்குடி மாவட்டத்திற்கு 103 கோடியே 90 லட்ச ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தற்போது தாசில்தார்கள் சமர்பித்த அறிக்கையின் அடிப்படையில் விவசாயிகளுக்கான வறட்சி நிவாரண தொகை மத்திய கூட்டுறவு வங்கி மூலமாக தொடர்புடைய வேளாண்மை தொடக்க கூட்டுறவு வங்கிகளுக்கும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளுக்கும் அனுப்பப்பட்டு வருகிறது.

வேளாண் தொடக்க கூட்டுறவு வங்கியில் கணக்கு உள்ள விவசாயிகள் இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன் தங்கள் பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளரையோ அல்லது கிராம நிர்வாக அலுவலரையோ அணுகி அவர்கள் வழங்கும் ஒப்புதல் சீட்டில் போட்டோவினை ஒட்டி கையொப்பம் இட்டு பணத்தை பெற்றுக் கொள்ள வேண்டும்.

தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கணக்கு உள்ள விவசாயிகள் தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலரை அணுகி அவர்கள் வழங்கும் ஒப்புதல் சீட்டில் போட்டோவினை ஒட்டி கையெழுத்து இட்டு அந்த ஒப்புதல் சீட்டினை தேசியமயமாக்கப்பட்ட வங்கி மேலாளரிடம் ஒப்படைத்து நிவாரண தொகையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

வங்கி கணக்கு இல்லாத விவசாயிகள் தங்கள் பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி செயலாளரை அணுகி உரிய ஆவணங்களை காண்பித்து வங்கி கணக்கு துவக்கி, பின்னர் ஒப்புதல் சீட்டில் போட்டோவை ஒட்டி கையெழுத்து இட்டு நிவாரண தொகையை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வறட்சி நிவாரணம் பெறுவதில் விவசாயிகள் அலைக்கழிப்பு நிதி ஒதுக்கியும், கூட்டுறவு வங்கிகள் சுணக்கம்

சிவகங்கை:மாவட்டத்தில், வறட்சி பாதித்த நெல், மிளகாய் சாகுபடி பரப்பிற்கு நிவாரணம் ஒதுக்கியும், கூட்டுறவு வங்கிகள் இழுத்தடிப்பதால், விவசாயிகள் அதிருப்தியில் உள்ளனர்.மாவட்ட அளவில், கடந்த ஆண்டு 2 லட்சத்து 14 ஆயிரத்து 840 ஏக்கரில், விவசாயிகள் நெல் நடவு செய்திருந்தனர். கடும் வறட்சியால் 1 லட்சத்து 45 ஆயிரத்து 378 ஏக்கர் நெற்பயிர்கள் விளைச்சலின்றி, கருகின. இதே போன்று இளையான்குடி, சாலைக்கிராமம், எஸ்.புதூர்,

கண்ணமங்கலம் உள்ளிட்ட பகுதிகளில் 8 ஆயிரத்து 575 ஏக்கரில் நடவு செய்திருந்த, மிளகாய் செடிகளும் விளைச்சலின்றி கருகின. வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க அரசு, சிவகங்கை மாவட்டத்திற்கு ரூ.75 கோடியை ஒதுக்கியது. வறட்சி பாதித்த பகுதிகளை மத்திய குழு பார்வையிட்டபோது, 3 நாட்களில், விவசாயிகளுக்கு நிவாரண தொகை வழங்கப்படும் என, மாவட்ட நிர்வாகம் உறுதியளித்தது. ஆனால், பெரும்பாலான கூட்டுறவு வங்கிகளில், பல்வேறு காரணங்களை கூறி, வங்கியாளர்கள், விவசாயிகளுக்கு இழப்பீட்டு தொகையை வழங்காமல், இழுத்தடிக்கின்றனர். குறிப்பாக,வறட்சி நிவாரணம் வழங்கும்போது, பட்டா யார் பெயரில் இருக்கிறதோ, அவரது பெயருக்கு தான் பணம் வழங்க முடியும். பெரும்பாலான விவசாயிகள், நில உரிமையாளரிடம் குத்தகைக்கு நெல் நடவு செய்து, கருகிவிட்டன. இது போன்ற விவசாயிகளுக்கு, நிவாரண உதவி தொகை வழங்க, வங்கிகள் மறுக்கின்றன. அதேபோன்று, திருப்புவனம், மானாமதுரை தாலுகாவிற்குட்பட்ட ஏராளமான கிராமங்கள், விருதுநகர் மாவட்ட எல்கையில் உள்ளன. இங்குள்ள விவசாயிகள் பெரும்பாலும், விருதுநகர் மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் தான் கணக்கு வைத்துள்ளனர். அவர்களது நிலங்கள், சிவகங்கை மாவட்டத்திற்குள் இருப்பதால், வறட்சி நிவாரண நிதியை எப்படி வழங்குவது என கூட்டுறவு வங்கிகளுக்கு தெரியவில்லை. இதன் காரணமாகவும், சிவகங்கை - விருதுநகர் மாவட்ட எல்கையில் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் வறட்சி நிவாரண தொகையை பெற முடியாமல் தவிக்கின்றனர். வறட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு, உரிய நிவாரண தொகையை விரைந்து வழங்க, கலெக்டர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும், என பாதிக்கப்பட்ட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தீவனமின்றி தவிக்கும் கால்நடைகள் பரிதாபம் பாதியாக குறைந்தது மாடுகள் எண்ணிக்கை

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் எப்போதும் இல்லாத அளவிற்கு, வறட்சியால் தண்ணீர், தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் கால்நடைகள் தவிக்கின்றன. அவற்றை அடிமாட்டு விலைக்கு, விவசாயிகள் விற்கும் கொடுமை அதிகரித்துள்ளது. இதனால் மாடுகளின் எண்ணிக்கை, பாதியாக குறைந்துவிட்டது.ராமநாதபுரம் மாவட்டத்தில், ஒரு லட்சத்து 25 ஆயிரம் எக்டேரில், நெல் விவசாயம் செய்யப்படுகிறது. திருவாடானை, கமுதி, முதுகுளத்தூர், பரமக்குடி உள்ளிட்ட பகுதி விவசாயிகள், வீட்டுக்கு ஒரு ஜோடி வீதம் உழவு மாடுகளை வளர்ந்து வந்தனர். விவசாயத்தில் இயந்திரங்களின் பயன்பாடு அதிகரிப்பால், மாடுகளின் சேவை கணிசமாக குறைந்தது.கடந்தாண்டு, பருவமழை பொய்ப்பால், எந்தாண்டும் இல்லாத அளவிற்கு, தற்போது ராமநாதபுரம் மாவட்டத்தில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது. நீர்நிலைகள் வறண்டு, நிலங்கள் தரிசாகி வருகின்றன. வயிற்று பிழைப்புக்காகவும், தீவனமின்றி கால்நடைகளை காப்பாற்ற

முடியாமல் திருவாடானை, கமுதி, முதுகுளத்தூர், ராமநாதபுரம் விவசாயிகள் ஆடு, மாடுகளை, அடிமாட்டு விலைக்கு சந்தையில் விற்று வருகின்றனர்திருவாடானை, விவசாயி காளிமுத்தன் கூறியதாவது: கடன் வாங்கி விவசாயம் செய்தும், மழையின்றி பயிர்கள் கருகின. 20 ஆயிரம் ரூபாய் கடனை திருப்பி செலுத்துவதற்கு, 40 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு ஜோடி மாடுகளை, தேவகோட்டை மாட்டு சந்தையில் 10 ஆயிரம் ரூபாய்க்கு விற்றேன். இவை கேரளாவிற்கு இறைச்சிக்காக கொண்டு செல்லப்படும். 5,000 ரூபாய் விற்ற ஒரு வெள்ளாடு விலை, 4,000 ரூபாயாக குறைந்துவிட்டது. ராமநாதபுரம் கால்நடை துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: கால்நடைகள் குறித்து, 2007ல் நடந்த கணக்கெடுப்பில், ஒரு லட்சத்து 60 ஆயிரம் மாடுகள், 2 லட்சத்து 90 ஆயிரம் வெள்ளாடுகள், 3 லட்சத்து 58 ஆயிரம் செம்மறி ஆடுகள், 3,549 எருமை மாடுகள் இருந்தன. தற்போதைய கணக்குப்படி, 70 ஆயிரம் மாடுகள், ஒரு லட்சத்து 89 ஆயிரம் வெள்ளாடுகள், ஒரு லட்சத்து 91 ஆயிரம் செம்மறி ஆடுகள் மட்டுமே உள்ளன. வறட்சியால் கால்நடைகளை விற்பது அதிகரித்துள்ளதே இதற்கு காரணம், என்றார்.

### ஏமாற்றிய கோடை மழை அணைகளின் நீர்மட்டம் குறைவு

பழநி:நீர்பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால், பாலாறு- பொருந்தலாறு, வரதமாநதி அணை , குதிரையாறு, பரப்பலாறு, நங்காஞ்சியாறு ஆகிய அணைகளுக்கு நீர் வரத்து இல்லாததால் நீர்மட்டம் குறைந்துள்ளது.பாலாறு-பொருந்தலாறு அணையின் நீர்மட்டம் 24.77 அடியாக உள்ளது. (மொத்தம் 65 அடி). ஏழு கன அடி நீர் குடிநீருக்காக வெளியேற்றப்படுகிறது. குதிரையாறு அணையின் நீர்மட்டம் 26.25 அடியாக உள்ளது. (மொத்தம் 80 அடி). மூன்று கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது.வரதமாநதி அணையின் நீர்மட்டம் 23.59 அடி. (மொத்தம் 67 அடி). இரண்டு கன அடி நீர் குடிநீர் தேவைக்காக வெளியேற்றப்படுகிறது. பரப்பலாறு அணையின் நீர்மட்டம் 31.82 அடியாக உள்ளது. (மொத்தம் 90 அடி). நங்காஞ்சியாறு ஆறு அணையில் 21.58 அடி தண்ணீர் உள்ளது. (மொத்தம் 40 அடி). கொடகனாறு அணையின் நீர்மட்டம் 10.57 அடி. (மொத்தம் 27.4 அடி).பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவர் கூறுகையில்; ""கொடைக்கானலில் மழை பெய்ந்துள்ளதால் வரதமாநதி அணைக்கு நீர்வரத்து ஏற்பட வாய்ப்புள்ளது. அணைகளிலிருந்து குடிநீருக்காக மட்டும் தண்ணீர் திறக்கப்படுகிறது. போதிய மழையில்லாததால் எந்த அணைக்கும் நீர்வரத்து இல்லை, நீர்மட்டம் வெகுவாக குறைந்துள்ளது," என்றார்.

### மா, தென்னை பாதிப்பிற்கு வறட்சி நிவாரணம் இல்லை

நத்தம்:நத்தம் பகுதியில் மழையின்றி கருகிய மா, தென்னைகளுக்கு வறட்சி நிவாரண நிதி மறுக்கப்பட்டதால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றிய பகுதிகளில் தொகுதியில் பருவ மழை பெய்யாததால், இப்பகுதி ஆறுகள், கண்மாய்கள், குளங்களில் தண்ணீரி ன்றி நிலத்தடி நீர் மட்டம் வற்றியது. இதனால், விவசாயக் கிணறுகளில் தண்ணீரின்றி நெல், வாழை, கரும்பு, பருத்தி, தக்காளி, பூ ஆகிய இறவை பயிர்களும், தட்டை, மொச்சை, கேழ்வரகு, சோளம், கம்பு ஆகிய மானா வாரி பயறு வகைகளின் மகசூல் பாதித்தன. இதனால், விவசாயிகள் நஷ்டமடைந்தனர்.இப்பகுதியில், மா, தென்னை, புளி ஆகிய மரவகைகளும் வறட்சிக்கு தப்பவில்லை. இந்நிலையில் மா சாகுபடிக்கேற்ற மழையின்றியும் பல ஊர்களில் மா மற்றும் தென்னை மரங்கள் கருகி பட்டுப்போய் மகசூலின்றி விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.தாசில்தார் நாராயணன் கூறுகையில்; "" நத்தம் தாலுகாவில் மா, தென்னை வறட்சியால் பாதிக்கவில்லை. அவ்வாறு ஏதேனும் வறட்சியால் மரங்கள் பட்டுப்போய் விவசாயிகள் பாதித்திருந்தால் வறட்சி நிவராண நிதிக்காக மனு செய்யலாம். இது குறித்து ஆய்வு செய்து நடவடிக் கை எடுக்கப்படும், என்றார்.

## பயிர் சாகுபடி பரப்பு நாளுக்கு நாள் குறைகிறது இயற்கை வேளாண் கருத்தரங்கில் பல்கலை துணைவேந்தர் "திடுக்'

திருத்துறைப்பூண்டி: ""இயற்கை சூழலுக்கு ஏற்ப நாமும் கற்றுக்கொள்ள வேண்டியது நிறைய உள்ளது. எறும்பு, எலிகளிடம் இருந்தும் கற்றுக்கொள்ள வேண்டி உள்ளது," என்று இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் பேசினார்.

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரெங்கம் இயற்கை வேளாண்மை பண்ணையில் மாநில அளவிலான இரண்டு நாள் கருத்தரங்கம் நடந்தது. துவக்க விழாவில் சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி சடையாண்டி பங்கேற்று கண்காட்சியை திறந்து வைத்தார்.

கருத்தரங்கை இயற்கை வேளாண் விஞ்ஞானி நம்மாழ்வார் துவங்கி வைத்தார். நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் ரவிசங்கர், தேசிய நமது நெல்லை காப்போம் ஒருங்கிணைப்பாளர் உஷாகுமார், காவிரி விவசாயிகள் பாதுகாப்பு சங்க தலைவர் துரையரசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிரியேட் அறங்காவலர் பொன்னம்பலம் வரவேற்றார். கருத்தரங்கில் உழவர்களின் வருமானமும், வாழ்வாதரமும், வருமானம் உத்தரவாதம், பாரம்பரிய நெல் சாகுபடி, ஒருங்கிணைந்த பண்ணையம், இயற்கை விவசாயத்தில் இடுப்பொருட்கள், ஒன்றை நாற்று தொழில்நுட்பம்,

இயற்கை உணவுப் பொருள் உற்பத்தி விற்பனை வாய்ப்புகள் நீர்நிலை பாதுகாப்பு, நீர் மேலாண்மை ஆகிய தலைப்புகளில் கருத்தரங்கு நடந்தது.

தலைமை வகித்து நம்மாழ்வார் பேசியதாவது:

அரிசியில் புரதம், நாற்சத்து, வைட்டமின், தாது உப்பு அதிகமாக உள்ளது. எறும்பு நெல்லை சேமித்து வைத்து உமியை மட்டும் ஒதுக்கி வைத்து விட்டு நெல்லை உண்டு உயிர் வாழ்கிறது. ஆனால், நாம் அரிசியை வெள்ளையாக்கி, பாலிஸ் செய்து அதில் உள்ள சத்துக்களை நீக்கி விட்டு வெறும் அரிசையை மட்டும் தான் சாப்பிட்டு வருகிறோம்.

அதனால், உடல் நிலை சரியில்லை என்று டாக்டர்களிடம் சென்றால் அரிசியை சாப்பிடாதே என கூறி விடுகின்றனர். அரிசியில் உள்ள அனைத்து சத்துக்களையும் நீக்கி விட்டு சாப்பிடுவதால் எந்த பயனும் இல்லை. இயற்கை விவசாயத்தில் பாரம்பரிய நெல் விதைகளான மாப்பிளை சம்பா, புதுக்கோட்டை மாவட்டத்தில் விளையும் கவுனி நெல் ரகங்கள் உடலுக்கு சத்து தரும் நெல் ரகங்களாகும்.

இயற்கை தந்த அந்த நெல் ரகங்களை உண்டு வாழ்வதால் உடல் நலமும் கெடுவதில்லை. இயற்கை விவசாயத்துக்கு பல்வேறு தரப்பில் இருந்து எதிர்ப்பு இருந்தாலும் தமிழகத்தில் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தும் நிலையை உருவாக்கி வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்.

தமிழ்நாடு வேளாண் பல்கலை துணைவேந்தர் ராமசாமி பேசியதாவது:

மரத்தை வெட்டி தண்ணீரில் போட்டு அதன் பட்டையை உரித்து அதை கலப்பை செய்வதுக்கும், ஏரு செய்வதுக்கும் பயன்படுத்தி வந்தோம். தண்ணீரில் ஊரப்போடுவதால் அதில் உள்ள நுண்ணீர்கள் மரத்தை வைரம் பாய்ந்த கட்டைகளாக மாற்றி தந்தது. அதே மரத்தை காயவைத்து கட்டு மரமாக பயன்படுத்தி கிரேக்கத்துக்கும், திபெத்துக்கும் ஏலம், கிராம்பு, தீ பெட்டி ஆகியவற்றை ஏற்றுமதி செய்தோம். நம்முடைய பாரம்பரிய தேடல் என்பது குறைந்து வருகிறது. சுந்தந்திரம் அடைந்த போது, 33 கோடியாக இருந்த மக்கள் இன்று, 138 கோடி மக்களாக உயர்ந்து விட்டனர். ஆனால் நமது சாகுபடி நிலப்பரப்பு என்பது நாளுக்கு நாள் குறைந்து வருகிறது. சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில் பாரம்பரியம் நெல் வகைகளை ஒருங்கிணைக்க வேண்டும். இந்தியாவில் உள்ள, 58 கோடி இளைஞர்கள், 25 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு நமது பாரம்பரியத்தை எடுத்துக்கூறி அவர்களுக்கு கற்றுத்தந்தால் உலகில் நமது நாட்டை சேர்ந்தவர்கள் தான் முன்னோடியாக இருப்பார்கள். நாம் முன்னோர்களை மறந்தோம். பாரம்பரியத்தை இழந்து வருகிறோம்.

அறிவியலும், தொழில் நுட்பமும் இணைந்து செயல்பட்டால் வெற்றி நிச்சயம், மேல்நாட்டு மோகங்களை மறந்து பாரம்பரிய தமிழ்ச் சமுதாய பண்புகளை போற்றி வளர்ப்போம்.

இவ்வாறு அவர் பேசினார்.

மாநில இயற்கை வேளாண் ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் நன்றி கூறினார்.

## நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்: கலெக்டர் தகவல்

தஞ்சாவூர்: "தஞ்சையில், கலெக்டர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை (31ம் தேதி) நடக்கிறது. இதில், விவசாயிகள் பங்கேற்று, குறைகளை தெரிவிக்கலாம்' என, கலெக்டர் கூறினார்.

இதுகுறித்து, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:

தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் நாளை (31ம் தேதி) காலை 10 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நடக்கிறது. இதில், புதிய தொழில்நுட்பங்கள் குறித்து விவசாயிகளுக்கு திட்ட விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் அனைவரும் நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் சார்ந்த கருத்துக்களை கூறுமாறு, கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் நாள் கூட்டத்தில் பங்கேற்று, கருத்துக்களை தெரிவிக்க தங்கள் பெயர், கிராமம் மற்றும் வட்டாரம் உள்பட விபரங்களை காலை 8:30 மணிக்கு 10 மணி வரை கம்ப்யூட்டரில் பதிவு செய்து கொள்ள வேண்டும். ஒவ்வொரு தாலுக்காவிலும் பதிவு செய்த முதல், இரண்டு விவசாயிகளுக்கு மட்டுமே கருத்துக்களை தெரிவிக்க அனுமதி வழங்கப்படும்.

இவ்வாறு, அவர் கூறியுள்ளார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.05.2013 A.M**

---

## தஞ்சையில் திடீர் மழை கோடை, குறுவை சாகுபடிக்கு உகந்தது விவசாயிகள் மகிழ்ச்சி

தஞ்சை, : தஞ்சையில் பல்வேறு பகுதிகளில் நேற்று திடீர் மழை பெய்தது. இது கோடை மற்றும் குறுவை சாகுபடிக்கு உகந்தது என விவசாயிகள் தெரிவித்தனர்.

தஞ்சை மாவட்டத்தில் அக்னி நட்சத்திரம் முடிந்தாலும் கடும் வெயில் வாட்டி வருகிறது. நேற்று 102 டிகிரி வெயில் பதிவானது. இதனால் மதியவேளைகளில் நகர் பகுதிகளில் மக்கள் நடமாட்டம் வெகுவாக குறைந்துவிட்டது. அனல் காற்று வீசுவதால் பலர் வீட்டைவிட்டு வெளியே வருவதில்லை.

இந்நிலையில் நேற்று மாலை திடீரென தஞ்சை மற்றும் சுற்றுப்பகுதிகளில் இடியுடன் கூடிய பலத்த மழை பெய்தது. இதனால் வெப்பம் தணிந்தது. பூமி குளிர்ச்சி அடைந்து குளிர்ந்த காற்று வீசியது. தாழ்வான இடங்களில் மழைநீர் தேங்கியது. இதனால் சமீப காலமாக கடும் வெப்பத்தில் வாடி வதங்கிய மக்கள் நேற்று பெய்த மழையால் மகிழ்ச்சி அடைந்தனர். மேலும் இம்மழை தற்போது சாகுபடி செய்யப்பட்டுள்ள கோடை பயிருக்கும், பம்ப்செட் மூலம் மேற்கொள்ளப்பட்டுள்ள குறுவை சாகுபடி பயிர்களுக்கும் பெரும் பலன் தரும் என விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர். கும்பகோணத்தில் நேற்று மாலை 2 மணி நேரத்திற்கு மேல் பலத்த மழை பெய்தது. பாபநாசம் பகுதிகளில் ஒரு மணி நேரம் மழை கொட்டியது.

## 3 ஊராட்சிகளில் உழவர் பெருவிழா விழாவில் வேளாண் இடுபொருள் வழங்கல்

கறம்பக்குடி, : கறம்பக்குடி வட்டாரத்தில் 3 ஊராட்சிகளில் நடந்த உழவர் பெருவிழாவில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கப்பட்டன.

கறம்பக்குடி வட்டாரத்தில் கீராத்தூர், வான்டான் விடுதி, கரு.கீழத்தெரு ஆகிய ஊராட்சிகளில் உழவர் பெருவிழா நடைபெற்றது. கீராத்தூர் ஊராட்சி தட்டாமலைப்பட்டி கிராமத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் கறம்பக்குடி வேளாண்மை உதவி இயக்குநர் மனோகரன் தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் ரெங்கசாமி முன்னிலை வகித்தார். வாண்டான்

விடுதி ஊராட்சி வான்டான்விடுதி கிராமத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் ஊராட்சி மன்றத்தலைவர் ராஜாத்தி முன்னிலை வகித்தார்.

மேலும் கரு. கீழத்தெரு ஊராட்சி நல்லாண்டார் கொல்லை கிராமத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் ஊராட்சி மன்றத் தலைவர் அழகர் தலைமை வகித்தார். மாவட்ட கவுன்சிலர் சித்ராதேவி ரெங்கப்பன் முன்னிலை வகித்தார். 3 ஊராட்சிகளிலும் நடைபெற்ற உழவர் பெருவிழா நிறைவு விழாவில் விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் வழங்கினர். விழாவில் வேளாண்மைத் துறை சார்பாக கருத்துக் காட்சி மற்றும் செயல் விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது.  வேளாண்மை அலுவலர் லூர்துராயப்பன், உதவி வேளாண்மை அலுவலர் (விற்பனை) கோபாலகிருஷ்ணன் மற்றும் தோட்டக்கலைத்துறை உதவி வேளாண்மை அலுவலர் சந்திரன், வேளாண் துணை அலுவலர் குருநாதன், பொதுப்பணித்துறை அலுவலர் விஜயவீரன் மற்றும் அலுவலர்கள் விவசாயிகளுக்கு திட்ட விளக்கம் அளித்தனர். கலை நிகழ்ச்சியின் மூலம் வேளாண்மை தொழில் நுட்பங்கள் பற்றி தெரிவிக்கப்பட்டது.

உழவர் பெருவிழா நிறைவு விழாவில் பாரம்பரிய விவசாய விளைபொருட்களாக பயன்படுத்துவது பற்றி வழிப்புணர்வு கருத்தரங்கு நடைபெற்றது.

## அன்னவாசல் அருகே பாரம்பரிய பொருள் குறித்து விழிப்புணர்வு பேரணி

அன்னவாசல், : அன்னவாசல் அருகே பாரம்பரிய பொருள் குறித்து விழிப்புணர்வு பேரணி நடந்தது.

அன்னவாசல் ஒன்றியத்தில் வேளாண்மை துறை சார்பில் உழவர் பெருவிழா கோத்திராப்பட்டி ஊராட்சி மலைக்குடிப்பட்டியில் நடைபெற்றது. ஊராட்சி தலைவர் பெரியசாமி தலைமை வகித்தார்.

விராலிமலை எம்எல்ஏ விஜயபாஸ்கர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். மேலும் விவசாய கருத்தரங்கத்தையும் துவக்கி வைத்து பேசினார். ஒன்றிய கவுன்சிலர் கணேசன் முன்னிலை வகித்தார்.

வேளாண்மை உதவி இயக்குநர் சிங்காரம் வரவேற்றார். வேளாண்மை துறையில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் மானியங்கள் பற்றி வேளாண்மை அலுவலர் சுமித்ராதேவி விவசாயிகளுக்கு எடுத்து கூறினார். பேரணியில் கோத்திராப்பட்டி ஊராட்சிக்குட்பட்ட கிராமங்களிருந்து 100க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பாரம்பரிய வேளாண் விளை பொருட்களின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் கலந்து கொண்டனர்.

விவசாயிகளுக்கு ஒருங்கிணைந்த கையேடுகள், தொழில்நுட்ப கையேடுகள், தொழில்நுட்ப பிரசுரங்கள் ஆகியவை வழங்கப்பட்டன. விவசாயிகளுக்கு மானிய விலையில் நுண்சத்துக்கள் கைத்தெளிப்பான், ஜிப்சம் ஆகிய இடுபொருட்கள் வேளாண்மை துறை சார்பாக பயனாளிகளுக்கு வழங்கப்பட்டது.

ஊராட்சி செயலாளர் ஞானசேகர், முன்னோடி விவசாயி முருகேசன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். வேளாண் உதவி அலுவலர் மணிவேல் நன்றி கூறினார்.

## கட்டிடங்கள், வாகன பெருக்கம் மாநகராட்சி பகுதியில் மரங்கள் பற்றிய ஆய்வு

கோவை: தமிழகம் முழுவதும் மாநகராட்சி பகுதிகளில் மரங்கள் அழிக்கப்படுவதால் அனல் காற்று வீசுவதாகவும், சுவாச காற்று கூட கிடைக்காமல் மக்கள் மூச்சு திணறும் நிலையிருப்பதாக கூறப்படுகிறது. வாகனங்களின் பெருக்கத்தில் காற்றில் கார்பன் டை ஆக்சைடு அளவும் அதிகரித்து வருகிறது.இந்நிலையில், மாநகராட்சி பகுதிகளில் மரங்களின் நிலை குறித்த அதிரடி ஆய்வு பணியை, தமிழக அரசு வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி மைய முதல்வர் துரைராசு, கோவையில் நேற்று துவக்கி வைத்தார். வன ஆராய்ச்சி நிறுவன பேராசிரியர் பாலசுப்ரமணியம், தன்னார்வ அமைப்பினர் மற்றும் வன ஆராய்ச்சி நிறுவன மாணவர்கள் 120 பேர் இதில் பங்கேற்றுள்ளனர். இந்த ஆய்வு பணி 2 மாதம் நடத்தப்படுகிறது. பின்னர் சென்னை, மதுரை, சேலம், திருச்சி உள்ளிட்ட இதர மாநகராட்சி பகுதிகளில் ஆய்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. வனக்கல்லூரி, ஆராய்ச்சி மைய முதல்வர் துரைராசு கூறுகையில், ''கோவை மக்கள் தொகைக்கு எவ்வளவு மரங்கள் தேவை என ஆய்வு செய்யப்படும். மக்கள் சுகாதாரமாக வாழ, நல்ல சுவாச காற்று பெற மரங்கள் தேவையாக இருக்கிறது. ஆய்வு முடிவுகள் அரசின் பார்வைக்கு அனுப்பி வைக்கப்படும். வரும் காலத்தில் மாநகராட்சி பகுதிகளில் தேவையான அளவு மரங்கள் நடுவதற்கு இந்த ஆய்வு பயனாக இருக்கும்'' என்றார்.

## தென் மேற்கு பருவமழை 3 நாட்களில் தொடங்கும்



சென்னை : கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்குவதற்கு ஏற்ற சாதகமான நிலை உருவாகியுள்ளது. இதையடுத்து இன்னும் 3 நாட்களில் தென் மேற்கு பருவமழை தொடங்கும். வங்கக் கடலின் வடமேற்கு பகுதியில் ஒரு காற்றழுத்தம் உருவாகியுள்ளது. இது வலுப்பெற்று வருகிறது. இது வடக்கு திசையில் நகர்வதால் சென்னை, கடலூர், நாகப்பட்டினம் ஆகிய துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை 1ம் எண் கொடி ஏற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. எண்ணூர், புதுச்சேரி, பாம்பன், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் புயல் எச்சரிக்கை கொடி ஏற்ற உத்தரவிடப்பட்டுள்ளது.

![Daily Thanthi logo]

**இன்றைய வேளாண் செய்திகள்**

**30.05.2013 A.M**

---

## கூடலூர் பகுதியில் கால்நடைகளுக்கு குடிநீர் தட்டுப்பாடு விவசாயிகள் கவலை

கூடலூர்,

கூடலூர் பகுதிகளில்உள்ள குளங்களில் தண்ணீர் இல்லாததால் கால்நடை களுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ஒட்டாண்குளம்

தேனிமாவட்டம், கூடலூரில் ஒட்டாண்குளம் என்றழைக் கப்படும் மைத்திலை மண்ணடி யான் குளம் உள்ளது. இந்த குளத்தின் மூலம் 406 ஏக்கர் நிலப்பரப்பில் இருபோக நெல் விவசாயம் செய்யப்படுகிறது. இந்த குளத்திற்கு முல்லைப் பெரியாற்றில் இருந்து வைர வன் வாய்க்கால் மூலம் கூட் டாறு வழியாக தண்ணீர் கொண்டு வரப்படுகிறது. குளத்தில் தேக்கி வைக்கப்படும் தண்ணீர் மூலம் இப்பகுதி விவசாயிகள் முறைபாசனம் செய்து வருகின்றனர்.

மழைக்காலங்களில் சுரங் கனார் நீர்வீழ்ச்சியில் இருந்து வரும் தண்ணீரையும் குளத்தில் தேக்கி வைத்து பாசனத்திற்காக பயன்படுத்தி வருகின்றனர். இந்த தண்ணீரை கால் நடை களுக்கு குடிநீராகவும், பால் மாடுகள் வளர்ப்பவர்கள் தின சரி குளத்திற்கு பசுக்களை அழைத்து வந்து தண்ணீரில் நீந்த விட்டும் செல்வார்கள். மேய்ச்சலுக்கு ஓட்டிச் செல்லப் படும் தொழுமாடுகள், ஆடு களுக்கும், விவசாய பணி களுக்கும் இந்த தண்ணீரைப் பயன்படுத்தி வந்தனர்.

கால்நடைகள் பாதிப்பு

இந்த நிலையில் கோடை மழை பொய்த்ததால் அணை களின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. இதனால் குளத்தில் தண்ணீர் நிரப்ப முடியாத நிலை உள்ளது. குளத்தில் இருந்த தண்ணீரும் முற்றிலும் வற்றிவிட்டதால் விவசாயிகள் வளர்த்து வரும் கால்நடை களுக்கு குடிதண்ணீர் தட்டுப் பாடு ஏற்பட்டுள்ளது.

இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். நிலத்தடி நீர்மட்டமும் குறைந்து வருவதால் ஆழ் துளை அடிகுழாய்களிலும் குறைந்த அளவு தண்ணீரே வருவது குறிப்பிடத்தக்கது. இந்த பிரச்சினை தீர தென் மேற்கு பருவமழையை இந்த பகுதி விவசாயிகள் எதிர் பார்த்துள்ளனர்.

## உழவர் பெருவிழாவில் மானியத்திட்டம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம்

ஸ்ரீவில்லிபுத்தூர்,

உழவர் பெருவிழாவில் மானியத்திட்ட விபரம் குறித்து விவசாயிகளுக்கு விளக்கம் அளிக்கப்பட் டது.

உழவர் பெருவிழா

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள ரெங்கநாதபுரம் கிராமத் தில் உழவர் பெருவிழா நடந்தது. ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை துணை இயக்குனர் வன்னியராஜன் தலைமை தாங்கி பேசினார். அப்போது, உழவர் பெருவிழாவின் நோக்கம், 2-ம் பசுமை புரட்சியின் அவசியம் குறித்தும் கூறினார். பருத்தி ஆராய்ச்சி நிலையத்தால் வெளியிடப்பட்டுள்ள ரகங்கள் குறித்தும், அதன் தன்மைகள் குறித்தும் பருத்தி ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ஞானசேகரன் விவசாயிகளுக்கு விளக்கம் அளித்தார். வேளாண்மை அலுவலர் ராமசாமி, சான்று பெற்ற விதைகளின் அவசியம் குறித்தும், சான்றளிப்பு துறையின் செயல்பாடுகள் குறித்தும் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் ராஜன், அட்மா திட்ட மேலாளர் லதா ஆகியோர் பேசினர்.

மானிய திட்டம்

வேளாண்மை துறையின் மானியத் திட்டங்கள், மண் மாதிரியின் அவசியம் குறித்து ஸ்ரீவில்லிபுத்தூர் வேளாண்மை அலுவலர் முத்து லட்சுமி விவசாயி களிடம் விளக்கமாக எடுத்து ரைத்தார். விவசாயிகளுக்கு விதைநேர்த்தி, மண் மாதிரி எடுத்தல்மற்றும் பார்த்தீனியம் செடி ஒழிப்பு குறித்து வேளாண்மை உதவி அலுவலர் கதிரேசன் செயல்விளக்கம் அளித்தார். முன்னோடி விவசாயி ஜெயக்குமார் தொழில் நுட்ப ஆலோசனை கிடைப்பது குறித்தும், மானியத் திட்ட விபரங்கள் குறித்தும் பேசினார்.

## அனைத்து விவசாய கடன்களையும் ரத்து செய்ய வேண்டும் சங்க மாநாட்டில் தீர்மானம்

கோவில்பட்டி,

பருவமழை பொய்த்ததால் விவசாயிகளின் அனைத்து விவசாய கடன்களையும் ரத்து செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்க தாலுகா மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சங்க தாலுகா மாநாடு

கோவில்பட்டியில் தமிழ்நாடு விவசாயிகள் சங்க தாலுகா மாநாடு நடந்தது. ஜி.சேதுராமலிங்கம், ஏ.அருமையநாயகம், பி.ரஞ்சிதம் ஆகியோர் தலைமை தாங்கினர். முன்னாள் எம்.எல்.ஏ. அய்யலுசாமி வாழ்த்தி பேசினார். கூட்டத்தில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தாலுகா கவுரவ தலைவராக முன்னாள் எம்.எல்.ஏ. அய்யலுசாமி, தலைவராக ஜி.சேதுராமலிங்கம், செயலாளராக ஏ.லெனின்குமார், பொருளாளராக பி.சுப்பையா மற்றும் நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் விவசாயிகளின் அனைத்து கடன்களையும் ரத்து செய்ய வேண்டும். வறட்சி நிவாரண தொகையை உடனே வழங்க வேண்டும். 60 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். தென்னக நதிகளை இணைக்க வேண்டும். நேரடி மானிய திட்டத்தை கைவிட வேண்டும். தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தை விவசாய பணிகளுக்கு விரிவுப்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட செயலாளர் நல்லையா, எட்டயபுரம் தாலுகா செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, ஏ.ஐ.டி.யூ.சி. தாலுகா செயலாளர் பரமராஜ், ராதாகிருஷ்ணன், சங்கரலிங்கம், வேல்முருகன், பொன்னுச்சாமி, அழகுமுத்து பாண்டியன் உள்பட பலர் கலந்து கொண்டனர். பி.சுப்பையா நன்றி கூறினார்.

## லாலாபேட்டையில் வாழை இலை விலை கிடுகிடு உயர்வு ஒரு இலை ரூ.10-க்கு விற்பனை

லாலாப்பேட்டை,

லாபேட்டையில் வாழை இலையின் விலை தாறுமாறாக உயர்ந்து உள்ளது.

வாழை இலை

லாலாப்பேட்டை சுற்றுப்புற பகுதிகளில் பல ஆயிரம் ஏக்கர் வாழை பயிர் செய்யப்பட்டு உள்ளது. இதனால் விளைச்சல் அதிகமாக இருந்ததால் கடந்த மாதம் ஒரு கட்டு இலை (100 இலைகள்) ரூ.

200 முதல் ரூ.250 வரை குறைந்த விலைக்கு விற்பனை ஆனது.இதன் காரணமாக வெளியூர் வியாபாரிகள் இந்த பகுதியில் வந்து வாழை இலையினை கட்டு கட்டாக வாங்கி சென்றனர்.

இந்தநிலையில் தற்போது வறட்சி ஏற்பட்டு உள்ளதால் வாழை இலை வரத்து குறைந்து விட்டது. இதனால் விலை தாறுமாறாக உயர்ந்து விட்டது. தற்சமயம் போதிய மழை இல்லாததாலும், காவிரி மற்றும் விவசாய பாசன வாய்க்காலில் தண்ணீர் இல்லாததாலும் பெரும்பாலான வாழைகள் காய்ந்தும்,காற்றினால் இலைகள் கிழிந்தும் விட்டன.

விலை தாறுமாறாக உயர்ந்தது

இதனால் தற்சமயம் குறைவான இலைதான் கிடைக்கிறது. இதுபற்றி வாழை இலை வியாபாரிகள் கூறும்போது, இந்த பகுதியில் வாழை உற்பத்தி ஏராளமாக உள்ளது. தற்சமயம் மழை இல்லாமல் வறட்சி நிலவி உள்ளதாலும், சூறாவளி காற்று வீசியதாலும் இலைகள் கிழிந்து விடுகிறது. இதனால் இலை சேகரிப்பு குறைந்து விட்டது.

தற்போது ஒரு இலையின் விலை ரூ.10-க்கும், ஒரு கட்டு (100 இலை) ரூ. 1000-க்கு விற்பனையாகி வருகிறது. வசதி உள்ளவர்கள் இலை பயன்படுத்துகின்றனர். தற்சமயம் கோவில் திருவிழா, திருமணவிழா என்பதால் விலை தாறுமாறாக அதிகரித்து உள்ளது. சாதாரண நாட்களில் விலை குறையும் வாய்ப்பு உள்ளது என்றார்.

## கொலக்கம்பை அருகே வாழை விவசாயம் பாதிப்பு: விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க கோரிக்கை

கொலக்கம்பை,

கொலக்கம்பை அருகே உள்ள கீழ்மானர், முள்ளி கிராமங்களில் வாழை விவசாயம் பாதிக்கப் பட்டு உள்ளதால் விவசாயிகளுக்கு நிவா ரண உதவி வழங்க வேண் டும் என்று விவ சாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

தமிழக- கேரள எல்லை வனப்பகுதி

நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் தென் மேற்கு மற்றும் வடக்கிழக்கு பருவ மழைகள் பெய்வது வழக்கம். இந்த மழையை நம்பியே நீல கிரி மாவட்டத்தில் உள்ள தேயிலை மற்றும் மலை தோட்ட காய்கறி விவசாயிகள் பயிர் செய்து வந்தனர்.ஆனால் கடந்த ஆண்டு போதிய அளவு பருவ மழை பெய்யாததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

கொலக்கம்பை அருகே உள்ள கீழ்மானர், முள்ளி, பால்மாரா லீஸ், சாம்பூர் உள் ளிட்ட கிராமங்கள் தமிழக- கேரள எல்லை வனப்பகுதியில் அமைந்து உள்ளது. இந்த கிராமங்களில் சமவெளி பகுதி களை போன்று தட்ப வெப்ப நிலை நிலவி வருவதால் பலா, பாக்கு, தென்னை, வாழை, சூரிய காந்தி உள்ளிட்ட பல் வேறு பயிர்களை இப்பகுதி விவசாயிகள் பயிர் செய்து வருகிறார்கள்.இந்த நிலையில், தற்போது போதிய அளவு பருவமழை பெய்யாததால் விவசாய நிலங் கள் நீர் இன்றி வறண்டு காணப்படுகிறது.

நிவாரணம் வழங்க கோரிக்கை

மேலும், இப்பகுதி யில் உள்ள விவசாய நிலங்கள் வனப் பகுதியை ஒட்டி அமைந்து உள்ளதால் அவ்வப் போது வன விலங்குகளும் விவசாய நிலங்களுக்குள் நுழைந்து பயிர்களை அழித்து வருகின்றன. இதனால் இப் பகுதி மக்கள் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டு வரு கின்றனர். தற்போது பெரும் பாலான விவசாயிகள் தங்க ளுடைய நிலங்களில் வாழை கன்றுகளை நடவு செய்து உள்ளனர். இந்த நிலையில் கடந்த சில நாட்களாக இப் பகுதியில் பகலில் கடுமையான வெயிலும், இர வில் லேசான நீர் பனிப் பொழிவும் ஏற்பட்டு வருகிறது. இதன் காரணமாக வாழை கன்றுகள் வளர்ச்சி பெறாமல் உள்ளது. எனவே வாழையை பயிர் செய்து உள்ள விவசாயிகளுக்கு தமிழக அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்று இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்து உள்ளனர்.

## விவசாய நிலங்களை வீட்டு மனைகளாக மாற்றுவதை தடுக்கா விட்டால் போராட்டம் விடுதலை சிறுத்தைகள் கட்சி அறிவிப்பு

கூடலூர்,

நீலகிரி மாவட்டத்தில் விவசாய நிலங்களை வீட்டு மனைகளாகமாற்று வதை தடுக்காவிட்டால் போராட்டம் நடத்தப் போவதாக விடுதலை சிறுத்தைகள் கட்சி அறி வித்து உள்ளது.

விவசாய நிலங்கள் அழிப்பு

விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் சகாதேவன் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:- உலகின் தலை சிறந்த சுற்றுலா தளமாக நீலகிரி மாவட்டம் திகழ்ந்து வருகிறது. மேலும் மலைப் பிரதேசம் என்பதால் சுற்றுச் சூழலை பாது காக்கும் விதத்தி லும், இயற்கை பேரிடர்கள் நிகழாத வண்ணம் கட்டிட வரை முறை சட்டங்களை அரசு உருவாக்கி உள்ளது.

இந்த நிலையில் ஊட்டி, கூடலூர், குன்னூர், கோத்தகிரி பகுதிகளில் விவசாய நிலங் களை பணக்கார முதலாளிகள் வாங்கி வீட்டுமனைகளாகவும், தங்கும் விடுதிகளாகவும் எந்த வித அனுமதியும் பெறாமல் சட்டத்துக்கு புறம்பாக புதிய தாக மனைப்பிரிவுகள் உரு வாக்கி வருகின்றனர். இதனால் விவசாய நிலங்கள் அழிவ தோடு, உணவு உற்பத்தியும் பெருமளவு பாதிக்கப்படுகின் றன. விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக மாற்றுவதை பயன்படுத்தி வெளி மாநி லத்தை சேர்ந்த சிலர் சட்டத் துக்கு புறம்பாக நிலங்களை தங்கள் பெயரில் பதிவு செய்து கொள்கின்றனர்.

போராட்டங்கள் நடத்தப்படும்

இதே போல் கூடலூர் பகுதி யில் செக்ஷன் -17 நிலங்களை யும் லட்சக்கணக்கான ரூபாய் கொடுத்து பணக்கார முத லாளிகள் வாங்கி வருகின்றனர். கூடலூர்- தேவர்சோலை, மைசூர் ஆகிய சாலைகளில் ஏக்கர் கணக்கில் உள்ள விவ சாய நிலங்கள் தற்போது மனைபிரிவுகளாக நகராட்சி யின் சில அலுவலர்களின் துணையுடன் மாற்றப்பட்டு உள்ளன. இதனை நகராட்சி நிர் வாகமும் கண்டு கொள்வ தில்லை.

எனவே மலைப்பிரதேசங் களில் தமிழக அரசின் கட்டிட விதிமுறை சட்டம் அத்தியாயம் 10 ஏ, 217ஏ, 217 பி-ன்படி கட்டிடம் கட்டுவதற்கான சட் டத்தை தீவிரமாக நடைமுறை படுத்த வேண்டும். கூடலூர் தொகுதியில் அண்டை மாநி லத்தவர்கள் நிலம் வாங்கு வதற்கு தடை விதிக்க வேண் டும். கடந்த 15 ஆண்டுகளாக வெளி மாநிலத்தவர்கள் வாங்கி உள்ள நிலங்களின் பத்திர பதிவுகள் குறித்து உரிய ஆய்வு நடத்தி ரத்து செய்ய வேண் டும். செக்ஷன்-17 நிலங்களின் மறைமுகமான விற்பனையை தடுத்து நிறுத்த வேண்டும் என கேட்டு கொள் கிறோம். தவறும் பட்சத்தில் விவசாயிகள், பொது மக்களை ஒன்று திரட்டி போராட்டங்கள் நடத் தப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.